20

[illegible]

ஆகஸ்டு—1931

தொகு. 5. Aug, 1931. பகு. 4.

JL
Y592 5G m211, N28
N31.5.4
158897

பிரஜோற்பத்தி௵ சித்திரைமீ




*The Progressive Printers* *17, Coral Merchant Street, Madras*

## உள்ளடக்கம்

செங்குந்தர்கள் மகாநாடு 89
தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரம் 90
அறிவியல் பகுதி:—III கனிமண்பாறை 91
,, பொன் நிலக்கரி 93
குலாபிமானப் பகுதி:—திருமுதுகுன்றம் செங்குந்தர்கள் கொடியேற்று மடம் 95
சுகாதாரப் பகுதி:—தேக சுகம் 97
,, சத்துள்ள அரிசி 99
தொழிற்பகுதி:—நம்மவர் கைத்தொழிலும், வியாபாரங்களின் தற்கால நிலையும், அவற்றை வளர்க்கும் முறைகளும் 102
மாதர் பகுதி:—மாதரொழுக்கக் கும்மி 105
புது உலகமும் பழைய உலகமும்:—இந்திய சாலியர் மகாநாடு 106
நிரூபம் 109
கிளர்ச்சி 110
செங்குந்தர் இரண்டாவது மகாநாடு வரவேற்புச் சபைக்கூட்டம் காஞ்சிபுரம் 114

### சந்தாதாரர்கட்கு அறிக்கை.

நமது இரண்டாவது மகா நாட்டு வேலைகளில் பிரசாரகர்கள் சில மாதங்களாக ஈடுபட்டிருந்ததால் 'செங்குந்த மித்திரன்' சந்தா வசூலுக்கு வெளியில் வர முடியவில்லை. அநேக சந்தாதாரர்கள் மகா நாட்டுக்கு வரும்போது கொண்டு வருவதாக அறிவித்துள்ளார்கள். ஆங்காங்குள்ளவர்கள் முயற்சித்துத் தங்கள் தங்களூர் சந்தா முழுதும் வசூலித்துக் கொணர்ந்து மகா நாட்டுக் கொட்டகையில் அமைக்கப்பட்டுள்ள 'செங்குந்த மித்திரன்' ஆபீசில் செலுத்திவருமாறு வேண்டுகிறோம். சந்தா பாக்கி ஒவ்வொரு ஊரிலும் அதிகமாக இருக்கிறது. 'மித்திரன்' பணக்கஷ்டத்தால் ஒவ்வொரு மாதமும் தாமதப்பட்டு வருகிற தென்பதைக் கவனித்துப் பாக்கியின்றிச் சந்தாவினைச் செலுத்திப் பத்திரிகை வளர்ச்சிக்கு ஒத்தாசை செய்வீர்களாக.

### நன்கொடை

தேவகோட்டை ஸ்ரீ முகானந்த வைத்தியசாலை ரேசிடெண்ட் டாக்டர் திரு. S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மூலம் தலைச்சங்கத்துக்கு வசூலித்தனுப்பிய நன்கொடை:—

தேவகோட்டை திரு. சி. ரங்கசாமி முதலியார் அவர்கள் புத்திரர் திரு. சுப்பய்யா முதலியாருக்கும் ஷை யூர் திரு வீர. பி. சி. சபாபதி முதலியார் அவர்கள் புத்திரி திருவாளர் செல்வி தனபாக்கியத்தம்மாளுக்கும் 21-4-31 சித்திரை திங்கள் 11-ம் நாள் சுக்கிரவாரத்தன்று நடந்தேறிய திருமணத்தில் பெரியோர்களால் ஆசி கூறி வழங்கிய நன்கொடை ரூ. 2.

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ரு] பிரஜோற்பத்தி வருஷம், சித்திரை மாதம் [பகுதி—ச

# செங்குந்தர் மகா நாடுகள்

பிரஜோற்பத்தி ஹூ வைகாசிமீ 3, 4
(16, 17-5-31)உ களில்
காஞ்சிபுரத்தில்

# தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடும்
# செங்குந்த வாலிபர் மகாநாடும்
# நடைபெறும்.

பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது!

வருக! வருக!! செங்குந்தர்களனைவரும் திரண்டு வருக!!!

விளம்பர சபைப் பிரசுரம் 3.

158897

# தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரம்.

அன்பு கெழுமிய ஐயன்மீர்,

நமது இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரத்தில் அடுத்த வைகாசிமீ 3, 4 தேதிகளில் (மேமீ 16, 17வ) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அதற்கென நிர்மாணிக்கப்படும் "முத்தைய நகரில்" நடைபெறும்.

வைகாசிமீ 3வ சனிக்கிழமை
காலை 6-30 மணிக்கு (ரயிலடியிலிருந்து) தலைவர்கள் ஊர்வலம்
,, 8-30 ,, கொடியேற்று விழா
மாலை 2 ,, மகாநாடு திறப்பு விழா
,, 5 ,, வாலிபர் மகாநாடு ஆரம்பம்

4வ ஞாயிற்றுக்கிழமை தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். (ஏனைய விவரங்கள் பின்னர் வெளியிடப்படும் நிகழ்ச்சிமுறைப் பத்திரிகையில் காணலாம்.)

மகாநாட்டில் தீர்மானங்கள் கொணர விரும்புகிறவர்கள் 13-5-31ந் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அவற்றை அனுப்பிவிட வேண்டும்.

செங்குந்தர் இரண்டாவது மகா நாட்டுக்கு நமது தலைச் சங்கத்தின் ஸ்தாபகரும், திருவாரூர் முனிசிபல் கவுன்சிலரும் தாலுக்கா போர்டு அங்கத்தினருமாகிய திரு. T. N. சபாபதி முதலியாரவர்களும் வாலிபர் மகா நாட்டுக்குச் சிவகங்கை ராஜாஸ் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., அவர்களும் தலைமை வகிக்க அன்புடன் இசைந்திருக்கிறார்கள்.

கோயமுத்தூர் ஸ்டேன்ஸ்மில் ஏஜண்டும், முனிசிபல் கவுன்சிலருமாகிய திருவாளர் வா. செ. செங்கோட்டைய முதலியாரவர்கள் மகாநாட்டுக் கொடியேற்று விழாவினை ஆற்றுவார்கள்.

பிரதிநிதிகள் பல்லாயிரக் கணக்காக வருவார்களெனத் தெரிகிறது. வருகின்றவர்கள் படுக்கை மட்டும் கொண்டுவர வேண்டும். அவர்கள் கொண்டு வரும் சாமான்கள் மீது பெயர், ஊர், ஜில்லா இவற்றின் பெயரைத் தமிழில் எழுதி ஒட்டி வர வேண்டும்.

குடும்பத்துடன் வருகின்றவர்கள் 12-ந் தேதிக்குள் காரியதரிசிக்கு அறிவித்துவிட வேண்டும்.

தொண்டர் படையில் சேர விருப்பமுள்ளவர்கள் 10-ந் தேதிக்குள் மனுச் செய்துகொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள் 14-ந் தேதி காலை மகா நாட்டுக் காரியாலயத்தில் ஆஜராகி மகாநாடு முடியும் வரையும் காஞ்சிபுரத்தில் தங்கி யிருக்க வேண்டும்.

மகாநாட்டுப் பந்தலில கடைகளும், பொருட் சாலைகளும் வைக்க விரும்புகின்றவர்கள் 12-ந் தேதிக்குள் தாங்கள் விரும்பும் கடை அல்லது பொருள் இன்னதென்றும் இவ்வளவு இடம் வேண்டுமென்றும் மனுச் செய்துகொண்டு உத்தரவு கிடைத்ததும் அதற்குண்டான கட்டணத்தைச் செலுத்திவிட வேண்டும்.

## மகாநாட்டு டிக்கட்டுகள் விவரம்.

| | | |
|---|---|---|
| வரவேற்பு அங்கத்தினர் | ரூ. | 3—0—0 |
| பிரதிநிதி | ரூ. | 1—0—0 |
| பார்வையாளர் (விசிட்டர்) | ரூ. | 0—4—0 |

பெண்மக்கள் டிக்கட் இன்றி அனுமதிக்கப்படுவர். அவர்கட்குத் தனி இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. டிக்கட்டுகள் மகாநாட்டுக் காரியாலயத்திலும் மகாநாட்டுக் கொட்டகையிலும் கிடைக்கும் வரவேற்பு அங்கத்தினர்கட்கும், பிரதிநிதிகட்கும் இனமாக உணவளிக்கப்படும்.

விலாசம்:—

காரியதரிசி, செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டுக் காரியாலயம்,
506, ஆடிசன் பேட்டை, காஞ்சிபுரம்.

இங்ஙனம்,
கனக. தெய்வசிகாமணி முதலியார்,
(ஜில்லா போர்டு மெம்பர்)
காரியதரிசி.



# அறிவியல் பகுதி

## III களிமண் பாரை (Clayey Rock)

[மு. த. வேலாயுதம் அவர்கள் வின்லங் [சைகோன்.]

### முதலாவதினம் களிமண்

களிமண் பல வகைப்படும். அழுக்கு நிறமாயும் செந்நிறமாயுங் காணப்படும். மற்றும் இங்குக் கூறப்பட்ட எல்லா வர்ணங்களும் சேர்ந்து காணப்படுவது முண்டு. களிமண் தொடுவதற்கு மிகவும் வழவழப்பாய் இருக்கும். ஜலத்தை விட்டுவிடாமல் காபந்து செய்யும். களிமண் பாத்திரத்தில் தண்ணீர் விட்டு வைத்தால் தேங்கிச் செல்லாதிருப்பதைக் காணலாம். ஆகையினால்தான் தண்ணீர் தேங்கி வெளியே செல்லாமற்படிக்கு வயல் பூந்தோட்டங்கள் முதலியவைகளில் உள்ள வாய்க்கால்களின் நெடுகே களிமண்ணை அணை போடுகிறார்கள். களிமண் உள்ள நிலங்கள் மழையினாலோ, அல்லது தண்ணீர் பாய்ச்சுவதனாலோ ஷை ஜலத்தைக் கிரகித்துக்கொண்டு வெகுநாள் வரைக்கும் காபந்து செய்யும். இதற்காகவேதான் நிலங்களைக் களிப்புறச் செய்வதற்குக் களிமண்ணோ அல்லது அதைச் சார்ந்த வண்டலோ ஷை நிலங்களுக்குப் போடுகின்றார்கள். விசேஷமாய்ப் புன்செய் நிலங்கள் மணற்பாங்காய் இருந்தால் களிமன் வண்டல் விடுவது வழக்கம். காரணம் யாதெனில் ஷை வண்டல் நிலத்திற்கு விட்டால் மண்ணோடு சேர்ந்து நிலம் களிப்பாகிறது. களிமண்ணுக்கு ஜலத்தைக் காபந்து செய்யக்கூடிய குணம் இருக்கின்றமையால், மழைத் தண்ணீரை வெகுநாள் வரைக்கும் காபந்து செய்கின்றது. இக்களிமண் சேராத நிலத்தில் கொஞ்ச நாளைக்குள் தண்ணீர் வரண்டு போகின்றது. அதனால் பயிர்களுக்குக் கெடுதலாகின்றது. ஆகையினாலேதான் நிலங்களுக்குக் களிப்புள்ள வண்டல்களைக் குடியானவர்கள் விடுகின்றார்கள். நம்நாட்டு மக்களிற் பெரும்பாலார் வண்டல் விடுவது நிலத்திற்கு நல்லதெனக் கருதுகின்றாரே யொழிய அதன் காரணங்களை நன்கு அறிந்திலர். நம்முன்னோர்கள் ஒவ்வொன்றையும் நன்கு ஆராய்ந்து அதன் சாராம்சத்தை ஒரு சிறு மொழியிலேயே எல்லாக் கருத்துக்களையும் அடக்கிப் பொதுவாக எல்லோருக்கும் குறிப்பாகப் பாரத மக்களுக்கும் பெருஞ் செல்வமாக வைத்து விட்டுப் போயினர். உதாரணமாக "நிலவளம்" என்று புராதன சரிதைகளிலும், இன்றும் பகர்வதைக் காணலாம். செழிப்புள்ள ஒரு நிலத்திற்கு வேண்டிய பொருள்களில் களிமண்ணும் ஒன்று. இக்களிமண் சேராத நிலம் வளப்பந்தராது என்பது உன்னியே நீர்வளம் இருப்பினும் நிலவளம் அவசியம் வேண்டற்பாலது என்று எழுதி வைத்துள்ளனர்.

களிமண்ணில் தண்ணீரை ஊற்றிப் பிசைந்து பாண்டங்களும் பொம்மைகளும் செய்கின்றார்கள். மிகவும் எளிதில் பற்பல உருவங்களை அமைப்பதற்குக் களிமண் மிகவும் உபயோகப்படுகின்றது. ஆனால் இப்படிச் செய்த உருவங்களைக் காயவிட்டால் வெடித்துவிடும். சூளை போட்டு நன்றாகக் காய்ச்சினால் மேற்படி உருவங்கள் கெட்டியாகின்றன. பச்சை, கருமை, செம்மை முதலிய நிறங்கள் பக்குவத்திற் கேற்றவாறு ஆகின்றன. சூளையில் வேகும்பொழுது களிமண்ணில் அடங்கி யிருக்கும் ஒருவித உலோக சத்துப் (airnoxyde) பல வகை நிறங்களால் வெளிவருவதைப் பார்க்கலாம்.

உற்பத்தி:—களிமண் சாதாரணமாய் ஏரி, குட்டை முதலியவைகளிலும் கடலின் ஆழத்திலுங் காணப்படும். நீர் நிலைகளின் அடியில் வண்டலாகவும் மண்மேடாகவும் தங்கி நிற்கும். நெருப்புக் கல்லின் சத்தும் காரமுள்ள மண்ணும் ஒன்று சேர்ந்ததே களிமண். ஆகையினால்தான் ரசாயன நிபுணர் சிலிகேட் ஆப் அலுமினா (silicate of alumina) என்று சொல்லுகின்றனர்.

உபயோகம்: மண் குழைவாய் இருப்பதனாலும், சூளையில் வெந்தபின் கெட்டியாய்ப் போவதனாலும், மனிதனுக்கு வேண்டிய உபயோகமான சாமான்களைச் செய்யக் களிமண் மிகவும் இன்றியமையாததாய் இருக்கின்றது. இதனை மண்ணோடு கலந்து சட்டி, பானை, செங்கற்கள், ஓடுகள் முதலியன செய்கின்றனர். சுத்தமான களிமண்ணைக்கொண்டு தட்டார்கள் வைத்திருக்கும் மூசை செய்யப்படுகின்றது. களிமண் இனத்தைச் சேர்ந்த "உழைமண்" என்னும் ஒருவித மண், கொழுப்பு, எண்ணெய் முதலிய கறைகளைச் சுலபமாய் இழுத்துக்கொள்ளும். இதற்காகவேதான் வண்ணார்கள் உடைகளை உழைமண் கலந்து வெள்ளாவில் வைப்பது. இம்முறை இந்தியாவில் வெகு புராதன காலத்திலிருந்தே கையாளப்பட்டு வருகின்றது. ஆனால் சமீப காலத்திலிருந்து வண்ணார்கள், சுலபத்திற்காக ஒருவித கார உப்பைப்போட்டு வெள்ளாவியில் வைக்கின்றனர். இம்மாதிரி செய்வது எவ்வகையினும் சிரேஷ்டமாகாது. விசேஷமாய்

நாட்டுப்புறங்களில் உழை மண்ணைக் கொண்டு தான் சலவை செய்கின்றனர். இன்னும் சில ஏழைகள் வெளிப்புறங்களில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு, ஆற்றோரங்களிலோ அல்லது குளத்தோரங்களிலோ காணப்படும் மண்ணை, இலுப்பைக் கட்டி, சிகைக்காய் முதலியவைகளுக்குப் பதிலாய்த் தலையிலிட்டுத் தேய்த்துக் கொள்வதைப் பார்க்கலாம். அதனால் எண்ணெயின் கசகசப்பு விட்டுவிடும். இந்த மண் முன் சொன்ன உழைமண்ணே. இங்கு மாத்திரமல்ல, மேனாட்டிலும் கம்பளத்தினால் தைத்த உடைகளில் எண்ணெய், கொழுப்பு முதலிய கறைகள் இருக்குமாயின் அவைகளை உழைமண்ணைக் கொண்டும் சுத்தி செய்கின்றனர்.

கிடைக்குமிடம்:—களிமண் இந்தியாவில் பெரும்பாலும் எங்குங் கிடைக்கக்கூடிய பொருளே. சர்வ சாதாரணமாய் இந்தியர்கள் மண்ணினாற் செய்த பாண்டங்களை உபயோகித்து வருவதே போதிய சான்றாம். மற்றும் உலோக வகைகள் கண்டு பிடிக்காத காலத்தில் மனிதர்கள் கல்லினாற் செய்த பாண்டங்களையும் மண்ணினாற் செய்த பாண்டங்களையுமே உபயோகித்து வந்தனர். எனினும் பின்கூறிய மட்பாண்டங்களே பெரிதும் ஆட்சிக்கு வந்தன. அன்று தொட்டு இன்று வரையில் ஏறக்குறைய எல்லாத் தேயத்தார்களாலும் முற்றிலும் புராதீன வழக்கத்தையே அடிப்படையாகக் கொண்ட இந்தியர்களாகிய நம்மாலும் மட்பாண்டங்கள் கையாளப்பட்டு வருகின்றன. இன்னும் பாரசீகத்தில் புராதீன மண்பாண்டங்களை மியூசியத்தில் காபந்து செய்து வைத்திருக்கின்றனராம். சமீபத்தில், சைனாவில் சில சாமான்கள் பூமிக்குள் அகப்பட்டனவாம். அவைகளில் 21136 மண்பாண்டங்கள் இருந்தனவாம். உலோக வகைகள் கண்டு பிடிக்காத காலத்திற்கு முன்னர் உபயோகப்படுத்தின மண் பாத்திரங்கள் இன்னும் சேன்ட்ஜெர்பன் மியூசியத்தில் இருக்கின்றனவாம்.

களிமண்ணைப் பூமிக்கு மேற்புறத்திலிருந்து மாத்திரம் எடுப்பதல்ல; பூமிக்குள்ளிருந்தும் எடுக்கின்றனர். வான்ஜிரார்ட் (Vangirard), இவ்ரி (Ivry), ஆட்டெயில் (Auteuil), முதலிய இடங்களில் இருக்கும் சுரங்கங்களிலிருந்தும் களிமண் எடுக்கின்றனர்.

களிமண்ணில் அநேக விதமுண்டு. கவலைன் (Kaolin) என்னும் மண் மிகவும் சுத்தமான களிமண் இனத்தைச் சேர்ந்ததாகும். இம்மண் பார்வைக்கு வெண்மையாய்க் காணப்படும். இதைக் கொண்டுதான் ஜாடி பீங்கான் முதலியவைகள் செய்கிறார்கள். சேண்ட் இரையெக்ஸ் (Saint-Yrieix) என்னும் இடத்தில் அகப்படும் மண்ணைக் கொண்டு பீங்கான், கோப்பை முதலியவைகள் செய்யப்படுகின்றன. இம்மண்ணானது மாவயிரக் கல், கருங்கல் இவைகளோடு கரியமிலவாயு சேர்ந்த தண்ணீர் முதலியவற்றால் உருவமடைகிறது. இம்மண்ணினாற் செய்த பாண்டங்களில் வெகுநாள் வரையில் உபயோகிக்கக்கூடிய ஊறுகாய் போன்ற பொருள்களைக் காபந்து செய்து வைக்கலாம். சுவையும், சாரமும் ஒருபோதுங் கெடாது. மதுபான வகைகளைக் காபந்து பண்ணச் சாடியை உபயோகிப்பதும், பூஞ்செடியை வளர்ப்பதற்கு மேற்கண்ட சாடியைத் தேடுவதும் முற்கூறிய காரணங்களினாலேயே.

சுண்ணாம்பு கலந்த களிமண்:—மார்ன் என்னும் இவ்வினம் சுண்ணாம்பு கல்லும் களிமண்ணும் சேர்ந்ததாகும். இதன் தோற்றம் சாதாரணமாய்க் களிமண்ணைப்போல் காணப்படும். ஆனால் மிகவும் உரமாய் இருக்கும். சுண்ணாம்பு அதிகம் கலந்திருக்குமாயின் கல்லைப்போல் அவ்வளவு உறுதியாய்க் காணப்படும். அதைச் சுண்ணாம்பு காளாவில் வைத்து வேக வைத்தால் தண்ணீரிற் கெட்டியான சுண்ணம் (Hydraulic-lime) பாகின்றது. பின் அதைத் தண்ணீரிற் கலந்தால் சுண்ணாம்பு கலவையாகின்றது. இத்தகைய வஸ்துவைக் கடலின் கீழே கட்டடங் கட்டுவதற்கு உபயோகப் படுத்துகின்றனர். இந்தச் சுண்ணாம்பு கலந்த களிமண்ணில் நூற்றுக்கு இருபது அல்லது இருபத்தைந்து பாகம் வெறுங் களிமண் இருக்குமாயின், அதை வெகுநாள் வரைக்கும் வரும்படியான திடமுள்ள சிமிட்டி செய்வதற்கு உபயோகிக்கின்றனர். நூற்றுக்கு இருபத்தைந்து அல்லது முப்பது பாகம் களிமண் சேர்ந்திருந்தால் அவ்வளவு சிரேஷ்டமான சிமிட்டியாகாது. முன்னையதைவிடப் பின்னையது சீக்கிரம் உதிர்ந்து விடும்.

## இரண்டாவது இனம் : கற்பலகை (slate)

கற்பலகை கருமையான கற்பாறையிலிருந்து எடுக்கப்படுகிறது. கற்பலகையில் நீலம், கருப்பு முதலிய நிறங்கள் கலந்திருப்பதுமுண்டு. மிகவும் அழுத்தமானது. நுண்ணிய அணுக்கள் சேர்ந்தது. எங்கும் ஒரே சமானமாயும் அழுத்தமாயுங் காணப்படும். ஒரு பெருங் கற்பலகையிலிருந்து அநேக தகடுகளை உடைத்தெடுக்கலாம். இத்தகடுகள் ஒன்றோடொன்று சேர்ந்துகொண் டிருக்கும். இத்தகடுகளைப் பிரிப்பதற்குக் கொழுப்பு தடவின உளியினால் மேற்படி கற்பலகையின் இடையிற் செருகி இலேசாய் அடிப்பார்கள். அப்பொழுது பலகை பலகைகளாகப் பிரிந்து போகும். இவ்வினக் கற்பாறையையே பலகைகளாகப் பிரிக்கக் கூடுமான பாறைகள் (Shistous) எனச் சொல்லுவர். இஃது ஷிஸ்டஸ் பிளப்பு என்னும் அருத்தங்கொண்ட கிரேக் மொழியிலிருந்து வந்த பதமாகும். பலகை பலகைகளாகப் பிரிக்கப்படுவதனால்தான் தமிழிலும் கற்பலகையெனக் காரணப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றது போலும். ஆனால் நன்கு கவனிக்குமிடத்து இருமொழிகளிலும் காரணப்பெயர் கொண்டே வழங்கி வருகின்றது என்பது புலனாகின்றது.

உற்பத்தி:—கற்பலகை களிமண் இனத்தைச் சார்ந்தது. உதாரணமாக ஒரு கட்டி களிமண்ணையெடுத்துக் கனத்தை அமிழ்த்தும் இயந்திர



(Hydraulic-press) த்தினால் அதை இறுக்குவோமானால் கற்பலகையைப் போன்றே மண் சேர்ந்து இறுகித் தகடாகின்றது. அதன் மேலும் களிமண்ணைப் போட்டு இறுக்குவோமானால் பின்னும் ஒரு பலகையாகின்றது. இவ்வாறு எத்தனை தரம் மேலும் மேலும் மண் சேர்த்து அமுக்குகின்றோமோ அத்தனைப் பலகைகள் ஆகின்றன. இவைகளைக் கனத்தில் பார்த்தால் நன்கு தெரியும். இவ்வாறேதான் கற்பலகை பூமியில் உற்பத்தியாகின்றது. வெகு காலத்திற்கு முன்னர் ஒன்று சேர்ந்து இறுகிய களிமண்ணையே இன்று நாம் கற்பலகையென அழைப்பது. பூமியில் வண்டல்கள் சேர்ந்து களிமண்ணாகின்றது என வைத்துக் கொள்ளுவோம். பின் சிலகாலஞ் சென்று வேறு களிமண் அதில் சேருகின்றது. முன்னர் காணப்பட்ட மண்ணை இஃது காலத்தினாலே அமிழ்த்துகின்றது. பின் வெகுகாலஞ் சென்று இதன்மேலுங் களிமண் சேர்கின்றது. அப்பொழுது பளுவு அதிகமாய் இருக்கின்றபடியினாலே, முன் சேர்ந்த வண்டல் களிமண் முதலியவைகள் மிகவும் அமிழ்கின்றன. இவ்வாறே மேன்மேலும் பல வருடங்கள், பல நூற்றாண்டுகள் வரையில் மேற்படி மண்ணின் மேல் பலவிதப் பொருள்களின் கனம் பொருந்துவதால் முன்னர் கூறிய களிமண் நன்றாய் இறுகி ஒன்றோடொன்று பல வகைகளாகச் சேர்ந்து கற்பலகை எனப்படுகின்றது.

உபயோகம்:—கற்பலகை சுத்தமானபின் எழுத உபயோகமாகின்றது. பெரியபோர்ட்கள் செப்பனிடுவதற்குங் கற்பலகை மிகவும் இன்றியமையாததாய் இருக்கின்றது. இன்னும் பூமியின்மேல் தளவரிசை போடுவதற்கும், மேசையின் பேரில் விளையாடும் ஆட்டங்களுக்காக ஷை மேசைக்குமேல் பாய்ச்சுவதற்கும் உபயோகப்படுகின்றது. கற்பலகை மிகவும் உரமாய் இருக்கின்றபடியாலும் சுலபமாக மூன்று மில்லிமீட்டர் கனமுள்ள பலகைகளாகவும் எடுக்கக் கூடுமாகையாலும், வீட்டின் கூரைக்கு ஓட்டிற்குப் பதிலாய்ப் பெரிதும் அதை மேனாட்டினர் உபயோகப்படுத்துகின்றனர்.

எடுக்குமிடம்: கற்பலகை மேனாடுகளில் விசேஷமாய் எடுக்கப்படுகின்றது. எனினும் பிராஞ்சு தேயத்தில் டிவில்லி (Deville), புயூமாய் (Fumay), ட்ரெலாஜி (Trelaze), அலசாக் (Alassac) முதலிய இடங்களில் உள்ள சுரங்கங்களில் இருந்து விசேஷமாய் எடுக்கப்படுகின்றது. சுரங்கங்களிலிருந்து கற்பலகை யெடுக்கும்பொழுது மேலொன்றும் அமைக்காது வெளிச்சத்திலேயே எடுப்பார்கள். பின் சுரங்கத்திற்குள்ளாகப் பெரிய அறைகள் அமைத்துக் கொள்வார்கள். அதினின்று பெரிய பாறைகளைப் பூமியின் மேற்பரப்பிற்குக் கொணர்ந்து பலகை பலகையாக உடைப்பார்கள்.

இந்தக் கற்பலகை இனத்தில் இன்னும் ஓரினம் இருக்கின்றது. அவ்வினத்திற்கு ஷீஸ்ட் (Schist) என்று பெயர். இது முற்கூறிய கற்பலகையைப்போல் அவ்வளவு கெட்டியாய் இராது. கரடுமுரடுமாய் இருக்கும். பலகைகளாகப் பிரிக்க வாராது.

இவ்வியாசத்திற் கண்டவைகளெல்லாம் களிமண்பாறை வகுப்பைச் சேர்ந்தவைகளாகும்.

(தொடரும்)

---

## பொன் நிலக்கரி

(சைகோன் “ஓப்பினியன்” என்னும் பெயர் கொண்ட பிரெஞ்சு பத்திரிகையில் கண்டது)

### சூரிய கிரணங்களால் அசையும் இயந்திரம்

நியூயார்க் கலாசாலையில் சூரியப் பிரகாசத்தால் நடக்கும் ஒருவித இஞ்சினைப்பூட்டி அவ்வூர்க் கலாசாலையிலேயே நடத்தி வெற்றி பெற்றார்கள் என்று சமீபத்தில் அங்கிருந்து வந்த தந்தி ஒன்று கூறுகிறது.

சூரிய உஷ்ணத்தினால் நடக்கும் இந்த ஏற்பாடு புதியதல்ல. 1834-ம் ஆண்டில் சர். ஜோன் எர்ஸ்சல் (Sir John Herschel) என்பவர் போன் எஸ்பிரென்சி என்னும் இடத்தில் யாத்திரை வாசியாய்த் தங்கி யிருந்த பொழுது ஒன்றின்மேல் ஒன்று வைக்கப்பட்ட இரண்டு பெட்டிகளினாலாய ஒரு கருவியால் ஒரு மாட்டைச் சூரிய உஷ்ணத்தினால் வேகவைக்கச் செய்தார். அந்தக் கருவியின் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஒரு கண்ணாடி பதித்திருந்தது. உஷ்ணமானது 80 100 120 டிக்ரியாய் ஏறிக்கொண்டே சென்றது.

1884-ம் ஆண்டில் அபில் பைப்ரி (Abel Pifre) என்பவர் சூரியக்கதிர்களால் நடக்கும் ஓர் இஞ்சினைக் கண்டு பிடித்து, அச்சு யந்திரசாலையில் பத்திரிகை அடிப்பதற்குக் கையாண்டு வந்தார். அப்பத்திரிகைக்குத் தினகரன் பத்திரிகை எனக்காரணப் பெயரிடப்பட்டது. வெகு காலத்திற்குப் பின் பிலா டெல்பி (Philadelphie) என்னும் நகரில் ஸ்குய்மான் (Schumann) என்னும் பெயர் பூண்ட ஓர் இஞ்சினீயர் முன் பார்த்தவாறே சூரியக்கிரணங்களால் நடக்கும் ஒருவித நூதன இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். அந்த இயந்திரம் கேர் தேசத்திலுள்ள ஓர் ஊரில் இருக்கும் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு மிகவும் உபயோகமாய் இருந்தது. முதலில் இந்த இஞ்சி

னீயர் தன்னுடைய ஊரில் ஸ்தாபித்து நடத்தினார். சில திருத்தங்கள் செய்தபின் ஏஜிப்த் நாட்டில் மெயடி (Meadi) என்னும் ஊரில் கொண்டு வந்து நடத்தினார். அப்பொழுது இப்புதிய முறை தலையெடுக்க ஆரம்பித்தது. ஆனால் பற்பல விதத்தாலும் இத்தகைய இயந்திரத்தை நடத்தி வெற்றி பெற்றதைக் கண்டும் ஆராய்ச்சி நிபுணர்கள் பல காரணங்களை முன்னிட்டு அபிவிர்த்திக்குக் கொண்டுவர வில்லை.

மற்றும் இன்று வளப்பம் பொருந்திய மண்ணெண்ணெய்க் கிணறுகள் இன்னும் இருபது வருஷத்திற்குள் வற்றிப்போகும் என்றும் பூமியிலிருந்து எடுக்கப்படும் நிலக்கரிகள் இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டிற்குள் ஒழிந்துபோகும் என்றும் தெரிகின்றது. அங்ஙனம் இயந்திரத்திற்கு இன்றியமையாத பொருள்கள் கிடைக்காவிடில் ஒரு புது விதமான சக்தியைக் கண்டு பிடிக்க வேண்டியதல்லவா? அதையே நாம் கவனித்தல் வேண்டும். சகலவித அபூர்வ சக்திகளையும் நமக்குத் தந்து இன்பக் கடலிலாழ்த்தும் இயற்கையன்னை அவைகளுக்குப் பதிலாக வேறொரு புதுப் பொருளை ஈயாதிருப்பாளோ? இயந்திரங்களுக்குப் புத்துயிர் கொடுத்துதவும் நிலக்கரி பெட்ரோல் முதலியவைகள் அகப்படாவிடில் ஆலை, மோட்டார்கார், கப்பல், ரயில் வண்டி முதலியவைகளை நடத்துவதற்கு என் செய்வோம்? நமது நாகரிகத்தின் சுடரொளி அம்மட்டுமா? இல்லை. இயற்கையணங்கு கருமியாகாள். அவளுடைய திரவியங்கள் ஒருபோதும் வற்றாதனவாகும். நமக்குக் கொடுத்த பொருளை இயற்கை மறுபடியும் பெற்றுக்கொள்வது முன்னினும் அதிக உயர்வான பொருள்களைக் கொடுப்பதற்கே. முதல் முதலில் இயந்திரங்கள் நிலக்கரியினால் நடைபெற்றன. பின் வெள்ளைக் கரியென்று சொல்லும் நீரினால். இனிமேல் பொன் நிலக்கரியென்று சொல்லப்படும் சூரியகிரணங்களினால் நடைபெறப் போகின்றன.

அழலவன் கதிர்கள் அபார சக்தியைத்தரும் ஆற்றலுள்ளன. இவ்வெய்யோனிட மிருந்து வேண்டிய சுடரொளியைப் பெறுவதற்கு அநேக விதங்கள் உண்டு. கமில் ப்ளாமரியன் (Camille Flamarion) என்பவர் அதைப்பற்றிக் கூறுவதாவது:-

சூரியன் பூமியைவிட 109 மடங்கு அதிக பருமனும் 324·000 மடங்கு அதிக கனமும் உள்ளது. அது 149 லக்ஷம் கிலோ மீட்டருக் கப்பால் இருக்கிறது. அத்தகைய தூரத்திலிருந்துதான் அதன் கிரணங்களை வீசுகின்றது. ஒரு விநாடிக்கு 300000 கிலோ மீட்டர் விழுக்காடு அவ்வொளி பாய்ந்து செல்லும் ஆற்றலுள்ளது. சூரியனிடமிருந்து நம்மிடம் வெளிச்சம் வர 8 நிமிடம் 11 விநாடியாகின்றது. இப்பொழுது 11·600 000·000·000·000 டன் நிறையுள்ள ஒரு நிலக்கரி மலையிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அம்மலையை எரிப்பதற்கு எவ்வளவு உஷ்ணம் தேவையோ அவ்வளவு உஷ்ணத்தையும் சூரியனிடமிருந்து ஒரே விநாடியில் நாம் பெற முடியும். அந்த அபார சக்தியைத்தான் நாம் கையாளாமல் விட்டிருப்பது. சூரியனிடமிருந்து வரும் கிரணங்களை நாம் எவ்வாறு அடைவது? தோட்டக்காரர்களைக் கவனிப்போம். வசந்த காலத்தில் பூஞ்செடிகளை நன்றாக வளர்ப்பதற்குக் கண்ணாடி மூடியினால், மேற்படி பூஞ்செடிகளின்மேல் சாடி மூடுகின்றார்கள். இங்குத்தான் நாம் மிகவும் கவனித்தல் வேண்டும். அவ்வாறு மூடினபொழுது சூரிய கிரணங்கள் அதன் பேரில் தாக்கி உள்ளே உஷ்ணத்தைச் செலுத்துகின்றது. ஜாடியினுள் சென்ற உஷ்ணம், மீண்டும் வெளியே வருவது மிகவும் கடினம். விதரணை இல்லா ஒரு தோட்டக்காரன் ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று கண்ணாடிக் கூடுகளைப் பூஞ்செடியின்மேல் வைப்பானானால் அந்தச் செடி அட்டியின்றி வெந்து போகுமென்பது திண்ணம். காரணம் யாதெனின் முன் உள்ளே சென்ற உஷ்ணம் ஒரே மூடியாய் இருக்கும் பொழுதே திரும்பி வருவது கடினம் என முன் அறிந்தோம். இப்பொழுது மூன்று கண்ணாடி மூடிகள் ஒன்றின்மேல் ஒன்று வைக்கப்பட்டிருந்தால் முன்கண்ட உஷ்ணம் உள்ளே அடைபட்டு அதிகமாகப் பெருகுகின்றது. இப்படி உஷ்ணம் பெருகுவதால் மூடியினுள் இருக்கும் செடியைத் தாக்கித் தீயவைக்கு மென்பது திண்ணம்.

இவ்விதமான முறையைக் கொண்டுதான், பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே சாஸ்ஸீர் (Saussure) என்னும் பெயர் கொண்ட ஒரு தத்துவ சாஸ்திரி தண்ணீரைக் கொதிக்க வைத்தார். இந்தத் தத்துவ சாஸ்திரத்தின் முறைமையைக் கொண்டுதான் சூரியக் கிரணங்களால் இயந்திரத்தை நடத்தப்போவது.

அங்ஙனம் நடத்துவதற்குச் சூரிய ஒளிகள் எப்பொழுதும் இருக்க வேண்டிய தவசிய மல்லவா? குளிர் நாடுகளிலும் மற்றும் கார் காலத்திலும் சூரிய ஒளி இல்லாத பொழுது மேற்கண்ட இயந்திரங்களை நடத்துவது எப்படி? வெப்பமுள்ள நாடுகளில் மிகவும் பக்குவமாய்ச் சேகரித்த உஷ்ணத்தைக் கொண்டு, குளிர் தேசத்தில் உபயோகிக்கலாம். எப்படியெனின் இஞ்சின்களில் முன் சொன்ன உஷ்ணத்தை உள்ளே அடைத்து வைத்தால்அவ்வுஷ்ணம் பெருகிச் சிலவிநாடிகளில் வெகு தொலவு செல்லும் மின்சார சக்தியாய்ப் போகின்றது. அத்தகைய அபார சக்தியைத் தருவதே முன்கூறிய பொன்னிலக்கரி என்னும் சூரியக் கிரணங்கள். 'சஹாரா' பாலைவனம் இன்று உஷ்ணத்தைக் கிரகித்துத் தரும் ஒரு பெரும் ஸ்தலமாகின்றது. உஷ்ண தேயத்திலுள்ள பாலைவனப் பூமிகளெல்லாம் இன்று பொன் சுரங்கங்களாகின்றன. இவ்வளவு மலிவாக அகப்படும் இந்த அபாரசக்திக்குப் பணவிரைய மில்லை. மோட்டார் வண்டி எண்ணெய் இன்றி ஓடும். கப்பல்களும், ரயில் வண்டிகளும் நிலக்கரி யில்லாமல் செல்லும். சூரிய பக

(95-வது பக்கம் பார்க்க)



(4)

# குலாபிமானப் பகுதி

## திருமுதுகுன்றம்—செங்குந்தர்கள் கொடியேற்று மடம்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

அருமணிக் கடல்சூழ் திலகுமிப்புவியில், எந்நாட்டிலும் நன்னாடாய்ச் சிறந்து விளங்குஞ் சீர்த்தியுடையதும், மணிவாசகப் பெருந்தகையால்,

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி"

என்று புகழ்ந்தோதப்பட்ட பெருமையினை யுடையதுமான தென்னாட்டிலே, முத்தநதி பாயுஞ் சித்தி யுடைத்தாய், திருஞான சம்பந்தராதி மூவர்களாலும் திவ்ய தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்றிலங்குவதும், ஆளுடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக இறைவன் செங்கல்கள் யாவையும் பசும்பொன்னாகச் செய்து கொடுத்தருளப்பட்டதும், குகை நமசிவாயர், சிதம்பர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், முதலிய மகான்களால் அழகிய திருப்பாடல்கள் புனைந்தருளப்பட்டிலங்கி மிளிர்வதும், விபசித்து மகா ரிஷிக்கு மோக்ஷமருளப் பெற்ற புண்ணிய பூமியா யொளிர்வதும், காசிக்குமேல் வீசம் பங்கதிகமென்று கொண்டாடப் பெறுவதுமாகச் சிறந்து வழங்குவது ஸ்ரீ விருத்த சைல மென்னுந் திருமுதுகுன்ற க்ஷேத்திரமாகும். இத்தலத்தில் அனாதிமல சித்துருவாய், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுத்த சுயஞ் சோதியாய் விளங்கும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய பெருமான், "ஸ்ரீபழமலை நாத"ரெனுந் திருப்பெயரோடு "வாலாம்பிகை" யென விளங்கும் "பெரிய நாயகி யம்மையார்" சமேதராய், கணபதி, கந்தன், என்னுந் தன் பரிவார மூர்த்திகளோடெழுந்தருளி யிருந்து ஆன்ம கோடிகளுக் கருள் புரியா நிற்பர். இறைவன் திருவருளாக்ஞைப்படி விபசித்து மகாமுனிவரென்னும் புண்ணியோத்தமரால் திருப்பணி செய்தமைக்கப்பட்ட இந்நகராலய நிருமாணம் காணத்தகுந்த சிறந்த காக்ஷிகளிலொன் றென்று கூறுவது மிகையாகாது. தவிர இத்தலத்தில் நடைபெறும் மாசிமக பிரம்மோற்சவம் மிகச் சிறந்தது. இவணிலங்கும் நித்தியானந்த கூபம், அக்கினி தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், மணிமுத்த நதி முதலிய தீர்த்த விசேடங்களின் மகிமை எடுத்தியம்பலாந் தகைமைத் தன்று. பெரும்பாலான புண்ணியத்தையும், மோக்ஷத்தையு மளிக்கவல்ல மணிமுத்த நதியின் மாசிமக ஸ்நானம் இங்கு மிகப் புனிதமாகவும், சிறந்ததாகவும் கொண்டாடப்படுகின்றது. இதற்காக நானாதிசைகளிலும் புலவிடங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் கூட்டமாக வந்து கூடுவார்கள். இத்தலமான்மிய வரலாறுகளை விருத்தாசல புராணமென்னும் நூலில் பரக்கக் காணலாம். கணித்தற் கரிதாகிய இத்தகைய பெருமை வாய்ந்ததும், "முதுகுன்ற மணிய" னென்னுஞ் செங்குந்தத் தலைவன் சிறந்து விளங்கி யிருந்ததுமான மேற்கூறிய விருத்த சைலமென்னுந் திருமுதுகுன்றப் பதியிலே "ஸ்ரீ குமார தேவர் மடாலய"த்துக்கு வடபால் "ஐயனார் கோயில் சந்நிதான வீதியில்" நம் முன்னோர்களான செங்குந்த குலத் தலைவர்களால் திருப்பணி செய்தமைக்கப் பெற்ற நம்மவர்கள் மடமொன்று திகழ்ந்து விளங்குகின்றது. நம்மனோரில் மிகச் சிலரே யிதனை நன்கறிவர். "குடத்திலிட்ட விளக்குப்"போல் இதுகாறும் மிகப் பிரசித்தமின்றி நம்மவர்கள் பலருக்குந் தெரியாமலே இருந்து விட்டது. இம்மடமானது நமது 72 நாடுகளில் வதியும் செங்குந்தர்களின் பொருளுதவியாலும், குவாக நாட்டுக் கிராமத்தினர்களாய, பொன்பரப்பி, சிறுகளத்தூர், கொடுக்கூர், மருதூர், வாரியங்காவல், எலையூர், கல்லாத்தூர், தொளார், முதலிய ஊர் மகா ஜனங்களின் பணவுதவி, தேக முயற்சியாலும், அகரம், அழகிபுரம், தாதாபுரம், ஸ்ரீ முஷ்ணம், நல்லாம்பாளையம் முதலிய சிலவூர்களின் பிரபுக்களது பொருளுதவியாலும், கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீ பெரியநாயகியார் சமேத பழமலை நாதருக்கு நடைபெறும் மாசி பிரம்மோற்சவத்தின் போது கொடியேற்று விழாவிற்கு துவஜாரோஹணச் சீலை, துவஜபடம், கொடிக் கயிறு முதலிய வரிசைச் சாமான்கள் இம்மடத்திலிருந்து நம்மவர்கள் அனுப்புவது வழக்கம். இன்றும் அத்தருமம் எவ்விதத்திலும் தடைபடாமல் நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது. இதனால் அம்மடத்துக்குச் "செங்குந்தர்கள் கொடியேற்று மடம்" என்று பெயர் வழங்கி வரலாயிற்று. நமது பண்டைப் பெரியோர்களின் தர்ம சிந்தனையும் தெய்வ பக்தியும் இதனால் நன்கு விளங்குகின்றனவல்லவா? ஷை உற்சவத்தின் அவரோஹணமும் நம்மவர்களைக் கொண்டே நடத்தி மரியாதையுடன் கோயில் மேளதாள விருதுகொடிகளுடன் நம்மவர்களைக்

---

(94-வது பக்கத் தொடர்ச்சி)

வானே தன் பலத்தைக் கொடுத்து இயந்திரங்களை நடத்த முன் வந்து விட்டான். இதனால் நமக்கு எதிர்பாராத பற்பல சௌகரியங்கள் கிடைக்கும் என்பது உறுதி. என்னே காலத்தின் முற்போக்கு!

கோயிலிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து மேற்கூறிய நமது மடத்தில் விடுவது வழக்கம். பழமலை நாதர் தேவஸ்தானத்தில் நம்மவர்களுக்கு மிக்க மரியாதையும், கௌரவமும், செல்வாக்கும் உண்டு. மடத்தில் அன்னதானமும் தண்ணீர்ப்பந்தர் தருமமும் நடந்து வந்ததாகத் தெரிகிறது. அவை இக்காலத்தில் நடைபெறவில்லை. இதனை நம்மவர்கள் மெல்லக் கை நழுவவிட்டு விட்டார்கள். தவிர இப்போது நடைபெற்று வரும் துவஜாரோஹண, அவரோஹணக் கட்டளைகளையுங் கூட கைவிட்டுவிடுவார்கள் போல் தோன்றுகிறது. ஏனெனில் முன்போல் அக்கட்டளைகள் அவ்வளவு சிரத்தையுடன் நடைபெறவில்லையென்பது உலக வதந்தி. எவ்விதத்திலும் ஷை மடத்தின் குடிக்கூலி வாடகை, வருமானம் முதலிய சில வருமானத்தின் ஆதாயங்களைக் கொண்டு மேற்கூறிய கட்டளைகள் வழுவின்றிச் சந்திராதித்தருள்ளவரைக்கும் நடைபெற்று வருமென்பதே எமது துணிபு. எனினுமிதனை நம்மவர்கள் நன்கு கவனித்துப் பண்டுபோல் செம்மையாய் மேற்படி தர்ம கைங்கர்யங்கள் நடைபெறும் வண்ணம் தக்கபடி முயற்சி செய்யவேண்டு மென்பதே எமது தாழ்மையான விண்ணப்பம். கிடைத்தற்கரிய கட்டளைகளைக் கைவிடுவது நம்மவர்களின் மேன்மைக்குத் தகுதியல்ல. நமது முன்னோர்கள் சிவாலய பரிபாலகர்களா யிருந்தார்களென்று நமது பண்டைய நூல்கள் முறையிடுகின்றன. ஆதியில் ஷை கட்டளைகளை நிறுவி நிலைநிறுத்திய பண்டைச் செங்குந்தப் பெரியார்களின் பிற்கால வழியினராகிய செங்குந்த குலமக்களே இதனை நன்கு கவனித்தல் வேண்டும். இவர்களே இதனை நன்கு கவனிக்காமல் புறக்கணிப்பார்களானால் எவ்வாறு ஷை கட்டளைகள் நடைபெற்று வருமோ அறியேம்! இதற்குக் காரணம் மேற்கூறிய குவாக நாட்டுச் செங்குந்தர்களின் அசிரத்தையே. இப்போது அந்நாட்டில் நம்மவர்களுக்குள், கட்சிப் பிளவு, பொறாமை, அடிதடி சண்டை, வீண்வம்பு, கச்சேரி வழக்கு முதலிய கொடுமைகள் குடிகொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இத்தீயகுணங்கள் நம்மவர்களை விட்டு என்று ஒழியுமோ! அறியேம்! பழமலை நாதன் றிருவருளால் அந்நாட்டில் சமாதானமும் ஒற்றுமையும் நிலவுவனவாக. சமரஸ ஞானந் தழைத்தோங்கிப் பண்டுபோல் நமது கட்டளைகள் பழமலையில் வேரூன்றுவனவாக.

நிற்க, இக்குவாக நாட்டுச் செங்குந்தர்களின் அசிரத்தையைக் கண்ணுற்ற,குவாகம் ச. மகாலிங்க முதலியார் என்னுங் குலாபிமானி ஒருவர், இதற்காக வெகுதூரஞ் சிரத்தை யெடுத்துக் கொண்டு, அந்நாட்டுச் செங்குந்தர்களிடஞ் சென்று பழமலை நாதரின் கட்டளை கைங்கர்யங்கள் பண்டுபோல் செவ்வனே நடைபெறும் வண்ணம் தம்மாற் கூடிய வரையில் எடுத்துச் சொல்லி முயற்சி செய்து வருகிறார். இத்தகைய முயற்சித் துறையில் இன்னும் பல செங்குந்த குலமணிகள் ஈடுபடுதல் வேண்டும். அப்பொழுதுதான் நம் முன்னோர்கள் ஏற்படுத்திய தர்ம கைங்கர்யக் கட்டளைகள் புத்துயிர் பெற்று இத்தரணியில் நிலவு மென்பது திண்ணம். ஷை மகாலிங்க முதலியாரின் குலாபிமானம் மிகவும் பாராட்டத்தக்கது. இவர் நமது விருத்தசைலம் "செங்குந்தர்கள் கொடியேற்று மடத்தில் "இருந்து கொண்டு "தண்ணீர்ப்பந்தர்" தருமம் நடத்தி வருகிறார். யாத்ராமார்க்கமாக அங்கு வரும் நம்மவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களையும் செய்து வருகிறார். மேற்படி மடத்தின் நிருவாகம் இம்மகாலிங்க முதலியார் வசத்திலும், இன்னொரு அண்ணாமலை முதலியார் வசத்திலும், இருந்து கொண்டு வருகிறதாகத் தெரிகின்றது. இவர்கள் குலாபிமானம் மிகவும் பாராட்டத்தக்கது. தவிர யாத்ரா மார்க்கமாக விருத்த சைலஞ் செல்லும் நமது குலமணிகள் தவறாது நமது செங்குந்தர்கள் மடத்திற்கு விஜயஞ் செய்யுமாறு கோரப்படுகின்றனர். அங்கே அவர்களுக்குத் தக்க வசதியுஞ் சௌகர்யமும் செய்து கொடுக்கப்படும். மடங்களின் பெருமையோ அளவுகடந்தது வரையறுத்துக் கூறுவது சாத்தியமான விஷயமல்ல. நமது பண்டைய நூல்களில் கோயிலைவிட மடத்தையே பெருமையாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதனை,

"திடம்பெற்ற ஞானியர்
சேர்க்கையால் பசி தீர்கையால்
உடம்புற்ற வுண்மையை
யோசிக்கையால் உபதேசிக்கையால்
இடம்பெற்ற வீசன்
ஏழைபங்காளன் இருத்தலினால்
மடம்பெற்ற பேறு
திருக்கோயிலுக்கில்லை மானிலத்தே"

என்னும் ஆன்றோர் அருள்வாக்கா லுய்த்துணர்க.

ஆகையால் செங்குந்த குலச்சீரியர்களே! நமது திருமுதுகுன்றத்தின் "செங்குந்தர்கள் கொடியேற்று மடத்தின்" விஷயமாகச் செய்யவேண்டிய பழுதுபார்த்தல், (Repair) சுண்ணும்பு அடித்தல், தளவரிசை செய்தல் முதலிய பல செலவுகளுக்காக ஷை தரும கைங்கர்யத்திற்காக வருலுக்குவரும் நமது குலாபிமானிகளுக்கு நம்மவர்கள் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி புரிவதோடமையாது, பழமலை நாதருக்கு நடைபெறும் துவஜாரோஹண, அவரோஹணக் கட்டளைகளைப் பண்டுபோல் நடைபெறுமாறு பொருளுதவி புரிந்து, தகுந்த மூலதனந் திரட்டி, அதன் வட்டி வருவாயினின்றும் ஷை கட்டளைகள் நடந்தேறுமாறு நன்முயற்சி செய்யும் வண்ணம் பொதுவாக எல்லாச் செங்குந்தர்களையும் கேட்டுக்கொள்வதுடனமையாது, சிறப்பு வகையில் குவாக நாட்டுச் செங்குந்தர்களை இது விஷயத்தில் மிகுந்த ஊக்கமெடுத்துக்கொள்ளுமாறு மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றனன். இதற்கு நம் வெற்றி வேலுடைக் கொற்றவன் றிருவருள்துணை புரிவதாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

---






## 'தேக சுகம்'

L. மாரியப்பன், (ஸ்டூடேன்ட்) திருச்செங்கோடு.

(தொகுதி ௫, பகுதி க, உ) 35-வது பக்கத் தொடர்ச்சி)

முன் சஞ்சிகையின் இறுதியில் சில முக்கிய விதிகளை ஆராய வேண்டுமென்று சொன்னோமல்லவா? அவைகளில் முதன்மையானது 'பரிசுத்தமான ஆகாயத்தையே கூடியவரையில் உட்கொள்ள வேண்டும்' என்பது. பரிசுத்தமான ஆகாயம், பரிசுத்தமான ஆகாயமென்றால் எந்த ஆகாயம் பரிசுத்தமானதென்று முதலில் கவனிக்க வேண்டும். அதாவது ஒரு பங்கு பிராணவாயுவும், நான்குபங்கு மந்தவாயுவும் கலந்ததுதான் பரிசுத்த ஆகாயமாகும். ஏன் இவ்விருவாயுக்கள் கலந்திருக்க வேண்டும்? பிராணவாயு ஒன்று மாத்திரம் சுவாஸிக்கப் போதாதா? என்போமானால், பிராணவாயுவின் வேகத்தை அல்லது காரத்தைத் தணிக்க மந்தவாயு அத்தியாவசிய மென்பது தெள்ளெனத் தெரியவரும். இவை தவிர மற்றவாயுக்கள் ஆகாயத்தில் எவ்வளவு கலந்திருக்குமோ அவ்வளவுக்கு ஆகாயம் அசுத்தமாகிறது. நமக்கு ஜன்ம விரோதிகளான வியாதிக் கணங்கள் (Germs of Microbes) அசுத்த ஆகாயத்தில் ஏராளமாகப் பெருகி வளரும்; ஆனால் சுத்தக் காற்றைக் கண்டால் ஓட்டம் பிடிக்கும். பூச்சிகள் நிறைந்திருக்கும் ஒரு வளைக்குள் கொதிக்கும் தண்ணீரை ஊற்றினால் எவ்வாறு அவை மடியுமோ அவ்வாறே பிராணவாயு பிரவேசித்தவுடன் அறையிலுள்ள வியாதிக் கணங்கள் மாண்டுபோம். சுத்த ஆகாயமும், சூரிய வெளிச்சமும் வியாதிப் பூச்சிகளுக்கு எவ்வளவு மாத்திரம் விரோதிகளோ அவ்வளவுக்கு அவை நம்மைக் காப்பாற்றும் உயிர்த் தோழர்கள்.

இருட்டு அறை சவுக்கியத்திற்குத் தகுதியானதல்ல. அறையின் கதவுகளை ஏதோ ஒரு சமயம் திறந்து விடுவது போதாது. எல்லா வேளைகளிலேயும் திறந்து வைக்கவேண்டும். அப்படிக் கதவுகளைத் திறந்து வைப்பதனால் வெளிக்காற்று உள்ளே வரவும், உள் காற்று வெளியே போகவும் ஏதுவாகி, வீட்டின் உள் இருக்கும் காற்று வெளிக் காற்றைப் போலவே சுத்தமாக இருக்க இயலுகிறது. திறப்பான வெளியில் எவ்வளவு காலம் கூடுமோ அவ்வளவு காலம் உலாவுவது மேலானது. பாடசாலையில் வகுப்புக்களுள்ள அறைகள், கூத்துக் கொட்டகைகள், ஸாதாரணமாக ஜனங்கள் வசிக்கும் அறைகள் முதலிய இடங்களிலுள்ள காற்று அசுத்தமாகிக் கொண்டேயிருக்கும். வெளியில் நடமாடிவிட்டு உள்ளே பிரவேசித்த மனிதன் அங்கே துர்நாற்றம் மிகுந்திருப்பதை உணர்வான். ஏனென்றால் அவ்விடத்தில் பிராணவாயு குறைந்தும், கரிவாயுவும் விஷவாயுவும் மிகுந்தும் இருக்கும். இவ்விஷவாயு நாம் மூச்சு விடும் போது வெளியேறுகின்றது. விஷக்காற்றினால் ஜனங்கள் தக்ஷணமே இறக்காமற் போனாலும் அவர்களைத் தலைவலியும், மயக்கமும் பீடிக்கும். இதிலிருந்து விஷக்காற்றினால் தீங்குண்டென்பது நமக்கு விளங்குகின்றதல்லவா? சாப்பிடும் பதார்த்தத்தில் விஷம் கலந்திருந்தால் அதை நாம் சாப்பிடுவோமா? அவ்வாறே உட்கொள்ளும் ஆகாயத்திலும் விஷமிருந்தால் நாம் அதை உட்கொள்ளக் கூடாது. வீட்டில் வியாதி வந்து வைத்தியருக்குச் செலவு செய்ய வேண்டாம் என்று கருதினால், வீட்டைத் தாழ்வான விடத்தில் கட்டாமலும், கூடிய வரையில் எதிரெதிராகப் பல ஜன்னல்களை வைத்தும், வெளிச்சத்தையும், சுத்தமான காற்றையும் நிரம்ப வீட்டினுள் வரவிட வேண்டும்.

### பரிசுத்த ஆகாயமே பரம அவுஷதம்

### 2. நல்ல ஆகாரத்தையே புசி

'நல்ல சாப்பாட்டைச் சாப்பிடு' என்று ஒருவன் சொல்லும் பட்சத்தில் அதற்குச் 'சமயம் கிடைத்தால் சந்தோஷம்' என்று கோடி ஜனங்கள் பதில் சொல்லுவார்கள். நல்ல ஆகாரம் என்றால் எது? அது நாம் வசிக்கும் தேசத்தின் சீதோஷ்ணஸ்திதியையும், நமது முன்னோர்களின் வழக்கங்களையும் அநுசரித்திருக்கின்றது.

எஸ்கிமோக்கள் எவ்வித ஆகாரத்தைச் சாப்பிடுகின்றார்கள் என்று தெரியுமா? அவர்கள் மாமிசத்தையும் கொழுப்பையுமே சாப்பிடுகிறார்கள். என்?

தங்கள் தேசத்தின் கொடுமையான குளிருக்கு இரையாகாமல் இருக்க வேண்டி. அவர்கள் சாப்பாடே அவர்கள் சவுக்கியத்திற்கு வேண்டிய சூட்டைத் தரத்தகுந்தது. எஸ்கிமோவர் இந்தியாவுக்கு வந்தால் அவர்கள் சொந்த நாடாகிய வடகடல் ஓரத்தில் சாப்பிட்ட ஆஹாரம் இங்கே சரிப்படாது. அவ்வாறே இந்தியர் வடகடல் தேசங்களுக்குச் சென்றால் இந்தியர் சாப்பிடும் அரிசியும், காய் கனிகளும், மிட்டாய்களும் அங்கே ஒத்துக் கொள்ளா. அவை அங்கே அகப்படவும் அகப்படா.

'ராமனுக்குப் பாயாஸம்; பீமனுக்குப் பாஷாணம்' என்பார்கள். அதாவது ஒருவனுக்கு ஒத்து வரும் சாப்பாடு மற்றொருவனுக்கு ஒத்துவாராது; கெடுதியே செய்யும். ஒரு தேசத்து வளமையான சாப்பாடு மற்ற தேசத்தில் அனுசரிக்க வாட்டப்படாது. தேஹ சிரமப்பட்டுத் தொழில் வேலை செய்கிறவனுக்கு அதிக ஆஹாரம் வேண்டும். நாளெல்லாம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்து மூளைக்கு மாத்திரம் வேலை தருகிறவன் சிறுகத்தான் சாப்பிடவேண்டும். செலவுக்குத் தகுந்த வரவு வேண்டுமல்லவா?

சாப்பாடு குறைதலும் ஆகாது, மிகுதலும் ஆகாது. குறைந்தால் பலவீனமும், மிகுந்தால் விஷம் போலவும் ஆகும் என்பது திண்ணம். வளரும் பருவத்திலிருக்கும் வாலிபன் எப்பொழுதும் பசி, பசி என்றே இருந்து அகப்பட்டபோதெல்லாம் சாப்பிடுவான். இது நல்ல காரியமே, ஏனென்றால், அவனுடைய சரீரத்தில் நஷ்டமாகிற சதையைப் பூர்த்தி செய்கிறதுடன் அவன் இன்னும் வளர வேண்டியதற்குத் தகுந்தபடி அதிகமான சதை வளர்ச்சியும் ஏற்படவேண்டியது. பசியைத் திருப்தி செய்து கொண்டு, வயிறு புடைத்துப் போகாமலிருக்கும்படி சாப்பிட வேண்டிய அளவே ஒரு வேளைச் சாப்பாடாகும்.

'ஒரு விரல் நுழைய இடமிருந்தால் இன்னும் ஒரு வடை தின்ன மாட்டேனோ?' என்பது போலச் சாப்பிடக் கூடாது. நாம் உயிர்த்திருப்பதற்காக உண்ண வேண்டியதே அல்லாது உண்ண வேண்டுமென்றே உயிர் வைத்திருப்பதில்லை. தேகாப்பியாஸம் செய்வதினாலும் வேலை செய்வதினாலும் நல்ல பசியை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

மரக்கறியே சாப்பிடுவது நல்லதா? மாமிசம் சாப்பிடுவது நல்லதா? என்று விசாரிக்குமிடத்து, இந்தியாவைப் போலொத்த உஷ்ண நாடுகளில் உளுந்து முதலிய தானியங்கள், அரிசி, சர்க்கரை முதலியனவை போலொத்த சுலபமாக ஜீரணிக்கக் கூடியதும், அதிக உஷ்ணம் செய்யாததுமான ஆஹார வஸ்துக்களே மாமிச வஸ்துக்களைக் காட்டிலும் சிறந்தவை யென்பது நிச்சயமாகத் தெரிகிறது. மாமிச ஆகாரத்தை ஜீரணிக்க அதிக நேரம் பிடிக்கின்றதல்லாமல், அதைச் சாப்பிடுவதனால் உணர்ச்சி நரம்பு சம்பந்தமான வியாதிகளும் 'கௌட்' என்ற வியாதியும் விளைகின்றன.

## 3. பரிசுத்தமான ஜலத்தையே குடிக்க வேண்டும்

குடிக்கும் ஜலம் கொஞ்சமும் நிறமில்லாததாகவும், சற்றும் அழுக்கில்லாமலும், தெளிவாகவும், ஒருவித வாசனையுமில்லாததாகவும், பிரகாசமாகவும் இருக்க வேண்டும். ஜலத்தில் இரண்டு விதமான அசுத்தங்கள் கலந்திருப்பதாகவும், ஒன்று தாது அல்லது கனிஜ சம்பந்தமானது, மற்றொன்று தாவரம் அல்லது மாமிச சம்பந்தமானதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டு அசுத்தங்களும் மனிதனுக்குத் தீங்கு செய்பவைதான். ஆகையால் சாப்பிடும் ஜலத்தில் அசுத்தங்கள் சேராதபடிக்கான பிரயத்தனங்களை யெல்லாம் நாம் செய்ய வேண்டும். அசுத்தங்கள் ஏற்பட்டால் உடனே வியாதிப் பூச்சிகளைக் கொன்று விட வேண்டும். வாந்திபேதி, விஷசுரம், சீதபேதி, வயிற்றுப் போக்கு, நரம்புச் சிலந்தி முதலிய வியாதிகள் உண்டாகும் காரணங்களைக் குறித்து விசாரிக்குங்கால் உண்மை கிணற்று ஜலத்திலிருக்கிறதென்றே புலப்படும். இலைகள் முதலியன மேலேயிருந்து விழுந்து கிணற்று ஜலத்தை அசுத்தம் செய்யாமல் இருக்கவேண்டியது மாத்திரமல்ல, வியாதியஸ்தர்கள் அதில் இறங்கி அசுத்தப்படுத்தாமல் இருக்க வேண்டியும், கிணற்றின் பக்கங்களில் சுவர்கள் எழுப்பி, கிணறும் மூடப்பட்டிருக்கவேண்டும். கிணற்றைச் சுற்றிலும் தளம் போட்டிருந்தால், பம்பின் உதவியால் அங்கு விழும் ஜலம் ஊறிக் கீழே செல்ல முடியாது.

கிணற்றின் ஜலம் அசுத்தமாயிற்று என்றே வைத்துக் கொள்ளலாம். அப்பொழுது என்ன செய்வது? 'பேர்மாங்கனேட் ஆவ் பொடாஷ்' என்ற ஒரு சிறந்த ரஸாயன வஸ்துவைக் கொண்டு சுத்தம் செய்யலாம். இது உப்பைப் போன்ற ஒரு வஸ்துவாகும். சுத்தம் செய்வதில் இதற்கு மிஞ்சின வஸ்து கிடையாது. இது மிகவும் சுலபமாகக் கிடைக்கக் கூடியது. இரவு முழுதும் கிணற்று ஜலம் கலங்காதபடி இருக்குமாதலால் அதைக் கூடுமானால் இரவிலேயே கிணற்றில் ஊற்றி விடுவது நல்லது. மறுநாள் காலையில் பார்க்கும்போது ஜலம் சிவப்பாக இருந்தால் அதன் உருசி ஒரு மாதிரியாக இருக்கலாம். ஆனால் அது யாதொரு கெடுதியையும் விளைக்காது. அந்த உருசி ஜனங்களுக்கு இஷ்ட விரோதமாக இருந்தால் சிவப்பு நிறம் முழுதும் போய்விடு மட்டும் கிணற்று ஜலத்தை இறைத்து விடலாம். அசுத்த மடைந்த தண்ணீரில் சுண்ணாம்பு பொடியைக் கொட்டுவதும் ஒரு நல்ல வழிதான்.

## 4. சுத்தமாக இருக்க வேண்டும்

அழுக்கு என்றால் என்ன? அதற்கென்று ஏற்படாத இடத்தில் இருக்கும் வஸ்து அழுக்காகும். குப்பை, குப்பைத் தொட்டியில் இருந்தால் தொட்டி அழுக்காக இருக்கிறது என்று எவராவது சொல்லுவார்களா? தெருவில் மண் கிடந்தால் தெரு அழுக்காக இருக்கிறது என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள். கடுதாசித் துண்டுகளும், மண்ணும் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் சிதறிக் கிடக்குமானால் அழுக்காகும்.



சரீரம் சவுக்கியமாக இருக்க வேண்டியதானால் சர்மத்தில் உள்ள கோடிக் கணக்கான சிறு துவாரங்கள் அடைபடக்கூடாது. அந்தத் துவாரங்களின் மார்க்கமாகவே வியர்வை புறப்படுகிறது. வியர்வை ஜலத்தில் சில விஷ உப்புக்களும் மற்ற அசுத்தங்களும் நிறைந்திருக்கின்றன. வியர்வை வெளிவர வேண்டியது மிக்க அவசியம். பல் தேய்ப்பதிலும், உடம்பு குளிப்பதிலும் இந்தியர்கள் விசேஷமாக இஷ்டமுள்ளவர்கள். அவ்வாறு உடம்பை அடிக்கடி கழுவிக்கொண்டு ஸ்நானம் செய்து வந்தால் அழுக்கு மாத்திரமல்ல, வியாதிக் கிருமிகளும் நிவர்த்தியாகும்.

கழுவிக் கழுவிக் குளித்து விட்டு அழுக்கு வஸ்திரங்களை உடுத்துவதும் தீதாகும். அழுக்கு வஸ்திரங்கள் வியாதியையும் கிருமிகளையும் வா, வா என்று அழைக்கின்றன. தோல் சம்பந்தமான வியாதிகளும் அழுக்கு வஸ்திரங்களாலேயே உண்டாகின்றன. அழுக்கு வஸ்திரங்களை வண்ணானுக்குப் போட்டு வெள்ளை வெளேர் என்று இருக்கும்படி வெளுத்து உடுத்திக் கொள்ள வேண்டும்.

### 'பக்திக்கடுத்தது பரிசுத்தம்'

சரீரத்தில் சுத்தமில்லா விட்டால் மாசில்லாத மனம் எவ்வாறு அமையும்? நமது தேசத்தார் கையினாலே சாப்பாட்டை எடுத்துச் சாப்பிடுகிற வழக்கமுள்ளவர்களாகையால் சாப்பிடு முன் கைகளைச் சுத்தம் செய்வது மிக அவசியம். பற்களைக் காலையிலும், சாப்பாட்டிற்குப் பின்பும் சுத்தம் செய்ய வேண்டும். ஒரு மிருதுவான குச்சியினால் பற்களைத் தேய்த்து, கூடுமானால் வென்னீராலும் இல்லாவிடில் குளிர்ந்த ஜலத்தினாலும் வாயைக் கொப்புளிக்க வேண்டும். பற்களில் ஊத்தை படிந்திருந்தால், கிருமிகள் மிகுந்து வாய் நாற்ற மெடுக்கும். ஊத்தை வாயுடன் சாப்பிட்டால், விஷ வஸ்துக்கள் கலந்து வியாதி வரும். மற்ற விஷயங்களை அடுத்த சஞ்சிகையில் தெளிவாகக் காண்க.

(தொடரும்.)

குறிப்பு:—முன் சஞ்சிகையில் 'அன்ன பானங்களில் மிதமாக இருக்க வேண்டும்' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கும் இரண்டாவது பாராவில் குறிப்பிட்டிருக்கும் சமாசாரத்திலிருந்து 'பிராந்தி முதலிய பானங்கள் அதிகமாகச் சாப்பிடுவதால் தேக சுகம் குறையும் என்பதனால் மிதமாகச் சாப்பிடலாம் என்று அர்த்தப்படுகிறது' என்று எனது நண்பர்கள் குறிப்பிட்டனர். பிராந்தி முதலிய போதையை உண்டாக்கும் வஸ்துக்கள் நமது சரீரத்திற்குச் சற்றும் அவசியமில்லை என்றிருக்கும் பொழுது கொஞ்சம் சாப்பிடலாமா? என்பது எவ்வாறு பொருந்தும்? இதனால் எனது பிழையை ஒத்துக்கொண்டு, என் வந்தனத்தை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

---

# சத்துள்ள அரிசி.

[புதுக்கோட்டை, இயற்கை வைத்தியநிபுணர் இயற்கை இல்லம், கி. லக்ஷ்மண சர்மா.]

(ஆசிரியர் அநுமதியுடன் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)

## 1. போது.

உணவானது உடலுக்குப் புஷ்டி தருவதற்கே சாதனமென்று மனிதரும், மருத்துவரும் நினைக்கிறார்கள். இது மிகத் தவறு.

உடலினின்றும் அப்போதைக் கப்போது கழிவுப் பொருள்கள் வெளிப்படுத்தவேண்டியதே முக்கியமானது. இந்த வேலை பாக்கிப்படுமானால், அக்கழிவுச் சரக்குக்கள் உடலிலேயே தங்கிப் போய், மிகுதியாகி, உயிருக்கு ஊறு செய்யும். இச் சரக்குக்களால் அழுக்கடைந்த தசைகள், நாடிகள், இரத்தம் இவை நோயுறும்; எவ்வளவு புஷ்டியுடனிருந்தாலும், நோய்களைத் தடுக்க முடியாது. உடலின் சுத்தியினாலேயே நோய்கள் தடுக்கப்படும்.

உடற் சுத்திக்குச் சில சத்துக்கள் இன்றியமையாதவை. அவையும் நம் உணவுப் பொருள்களிலேயே அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆகையால் உணவில் இரண்டு வகைச் சத்துக்கள் உண்டென்று நாம் நினைவில் வைக்கவேண்டும். ஒன்று சுத்தி தருவது, மற்றொன்று புஷ்டி தருவது.

மேலும், இவ்விரண்டிலும் முந்தியே முக்கியமானதென்றும் அறியவேண்டும். இவ்வுண்மையை முதலில் நன்கு விளக்கிக் கொண்டு அதன் பின் அரிசியில் இவ்விரு சத்துக்கள் இருக்கும உண்மையையும் அதனால் நாம் அரிசியை உண்ணும் முறைகளையும் விளக்குவோம்.

சென்ற மகா யுத்தத்தில் "கிரௌன் பிரின்ஸ் பிரெடெரிக்" என்றொரு ஜெர்மனிய யுத்தக் கப்பல் பெருங் கடலுக்கு அனுப்பப்பட்டது. அது முதலில் சுதேசத் துறைமுகத்தை விட்டு வெளிப்படும்போது, அதில் மாலுமிகளின் உணவுக்காக புஷ்டிதரும் உணவுப் பொருள்கள் குறைவின்றி நிரப்பப்பட்டன. வெண்மையான ரொட்டி செய்வதற்கான கோதுமை மா, அம்மாவிலே செய்த பிஸ்கோத்து, டப்பி மாமிசம், உப்பிலிட்ட மச்சங்

கள், வெள்ளைச் சர்க்கரை, காபி, டீ, டப்பிப்பால் இவைகளெல்லாம் புஷ்டி தரும் உணவுகளென்றும், நல்லவை யென்றும் மருத்துவர்களால் மதிக்கப்பட்டவை; இவைகளே கப்பலில் ஏற்றப்பட்டன. கோதுமையை மாவாக அரைத்து, அதினின்றும் தவிடு, ரவை முதலியவற்றைப் போக்கி மீதமிருக்கும் மாவே வெள்ளை மா. இப்படி வெண்மை யாக்காத மாவானது உடலுக்கு அவ்வளவு புஷ்டி தராதென்பதும், ஆகையால் அது நன்றல்ல வென்பதும், மருத்துவரின் எண்ணம். இக்கப்பலானது கடலில் செல்லும்போது, அந்நிய நாட்டுக் கப்பல்களைத் தாக்கி, அவைகளிலிருந்த உணவுப்பொருள்களைப் பறிமுதல் செய்து வந்தார்கள். அவற்றில் பழ வகைகள், புதிய காய்கறிகள், இவையும் சிறிது கிடைத்தன; ஆனால் கொஞ்சமானபடியால், இவை கப்பல் தலைவர்களின் உணவுக்காக மட்டும் செலவு செய்யப்பட்டன. மாலுமிகள் இவ்வித உணவுகளை எப்போதும் பெறவில்லை. இவ்வுணவுகளின்றியே காலங்கழித்த மாலுமிகளுக்கும், இவற்றை இடையிடையே உண்டு வந்த அதிகாரிகளுக்கும் ஏற்பட்ட வேற்றுமையுள்ள பயனைப் பார்ப்போம்.

சுமார் எட்டரை மாத காலமாக இம்மாலுமிகளின் உடல் நலத்தில் குறைவு காணப்படவில்லை. அதற்கப்பால் அநேகமாய் எல்லா மாலுமிகளும் சேர்ந்தாற்போல் கடுமையான நோயினால் செயலற்றுப் படுக்கைக்குக் கைதியானார்கள். அதிகாரிகளில் அநேகமாய் எல்லோரும் சுகமாகவே யிருந்தார்கள்.

மாலுமிகளுக்குக் கப்பலின் டாக்டர் சிகிச்சை செய்து பார்த்துப் பலிக்காததால், அப்போது அருகிலிருந்த அமெரிக்கத் துறைமுகத்திற்குச் சென்று, அந்நாட்டு அதிகாரிகளிடம் சரண் புகுந்தார்கள். அமெரிக்க வைத்தியர் ஒருவர் சிகிச்சை செய்து பார்த்தார். அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இவ்வரலாறுட்பட அநேக வரலாறுகளை நூலின் வழியாக வெளியிட்டவராகிய ஆல்பிரெட் மாக்கான் என்பவர் அச்சமயம் அங்கே வந்து தாம் மாலுமிகளைச் சொஸ்தமாக்குவதாக ஏற்றுக் கொண்டார்.

இவர் மாலுமிகளின் நோய்க்கு உண்மையான மூலம் இன்னதென்று அறிந்தார். புஷ்டிச் சத்துக்களே மிகுதியாயும், சுத்திச் சத்துக்கள் இன்றியும், அமைந்த உணவினால் அந்நோய் வந்ததென்று இவர் கண்டு கொண்டார். அதற்கேற்ற பரிகாரம் செய்தார். தவிட்டின் நீர், உருளைக் கிழங்குகளைத் தோல் புறமாகச் சீவி யெடுத்து அதனால் செய்த கஞ்சி, பழ ரசம், இவற்றையே உணவாகவும் மருந்தாகவும் கொடுத்தார். இவ்விதமாகச் சில நாட்களில் எல்லோரையும் சுகப்படுத்தி விட்டார். மற்றொரு விசித்திர சம்பவமும் யுத்த காலத்தில் ஜர்மனியில் நடந்ததாகத் தெரிகிறது யுத்த முகத்தில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட மருத்துவசாலையில், முதலில் சில காலம் நோயாளிகள் மிக விரைவில் சுகம் பெற்று வந்ததாகக் காணப்பட்டது. பிற்பாடு அங்கே இருந்த சேனைப் பகுதியை வேறோர் இடம் மாற்றி விட்டார்கள்; அவருக்குப் பதிலாக வேறொரு பகுதியாரை அவ்விடத்துக்கு அனுப்பினார்கள். இதன் பின் மருத்துவசாலையில் சிகிச்சைப் பயன் குறைவுபடக் காணப்பட்டது; காயங்கள் இலகுவில் ஆறுவதில்லை. மற்ற விதத்திலும் குறை ஏற்பட்டது. இதன் காரணத்தை விசாரித்ததில், முன்னிருந்த சேனைப் பகுதியார் தம் உணவுகளைச் சமைப்பதில் ஒரு விசேஷம் தெரிய வந்தது. அவர் காய் கறிகளைச் சமைப்பதில், சமைத்த சத்து நீரைக் கீழே கொட்டி விடாமல் அந் நீருடனேயே காய் கறிகளை உண்டார்கள். பிந்தி வந்தவரிடம் அவ்வித வழக்கம் காணோம். காய்கறிகள் வெந்த நீரைக் கொட்டிவிட்டுச் சத்திழந்த கறிகளை உண்ணுவது அவர் வழக்கமா யிருந்தது. இதனால் குற்றம் ஏற்பட்டிருக்கலா மென்று ஊகித்து, மருத்துவ அதிகாரிகள் இவ்வழக்கத்தை மாற்றிச் செய்தார்கள்; அதனால் நற்பயன் காணப்பட்டது. சத்து நீங்காத காய் கறிகளும் கீரைகளும் நாடிகளுக்கு வலுவளிக்கும்; நோய்களைத் தடுக்கும்.

கோதுமையினின்று வெண்மையான மா செய்வது, அரிசியை மினுக்குவது, அதாவது தீட்டுவது, வெல்லத்தினின்று வெள்ளைச் சர்க்கரை செய்வது காய் கறிகளை வேகவைத்து அதன் நீரை நீக்குவது, அரிசியைக் களைவது, அரிசியைச் சமைத்து அன்னமாக்கிக் கஞ்சியை வடிப்பது, இவற்றால் உணவின் முக்கியமான சத்து நீங்கிப் போகிறது. இதனால் உயிரானது உடலைச் சுத்தமாக்கிக் கொள்ள முடியாமற் போகிறது. சத்தையிழந்த உடலுக்கு நோய் வருவது திண்ணமாகையால், இங்கே குறித்த செயல்களே நமது நோய்களுக்கெல்லாம் அடிப்படை என்று காணலாம். ஆகையால் சத்திழந்த உணவு நஞ்செனக் காணலாம்.

நமது நாட்டில் சிசு மரணமும், அற்ப ஆயுளும், பலவீனமும் நோய்களும் மலிந்திருப்பதற்கு மேற்கண்ட தவறுகளே முக்கியமான காரணங்களாம். இத் தவறுகளை மாற்றுவதினாலேயே இக் குறைகளை மாற்ற முடியும். மேற்கண்ட முக்கிய சத்து ஆரோக்கிய சத்து—உணவினின்று பிரியாம லிருக்குமானால், அவ்வுணவுகள் இயற்கையான சுவையோடிருக்கிறது. அச்சத்து நீங்கினால், உணவின் சுவையும் போய் விடுகிறது. இதனால் செயற்கைச் சுவையூட்டி, அதை உண்ணும்படி நேருகிறது. உப்பு, புளி, மிளகாய், பெருங்காயம் முதலான சுவைப் பொருள்கள் இதனாலேயே நமக்குப் பழக்கமாயின இவைகளும் நோய் செய்கின்றன.

## 2. அரிசி.

மேற் குறித்த இரண்டு சத்துக்கள் அரிசியிலும் உண்டு. இவ்விரண்டிலும் முக்கியமான சத்து அரிசியின் மேற்புறம் இருக்கின்ற தவிட்டில் அடங்கியிருக்கிறது. ஆகையால் தவிடு போன அரிசி—தீட்டரிசி நஞ்சே தவிர உணவல்ல.



மேல் வருணித்த மாலுமிகள் சத்திழந்த உணவை உண்டு, எட்டரை மாதம் சென்று நோயுற்றார்களே, அதுபோல், அவ்வளவு சீக்கிரமாக நாம் நோயுறக் காணோமே, என்று கேட்கலாம். நாம் அம்மாலுமிகளைப் போலேயே அவ்வளவு நாள் சுத்தமாய்ச் சத்தற்ற அரிசியே உண்டு வந்தால் அப்படியே ஆவோம். ஆனால் நாம் சிறிது காய் கறிகள், மோர், பழங்கள் இவற்றை உண்ணுகிறோம். சத்துள்ள அரிசியையே, சத்திழக்காதபடி சமைத்து உண்ணுவோமானால், நாம் நோயின்றியும், திடதேகத்துடனும் வாழலாம். முற்காலத்தில் நெல்லை வீடுகளில் உலக்கையாலேயே குத்தி, சத்துப் போகாதபடி பொங்கலாகச் செய்து உண்டு வந்தார்கள். அப்போது மனிதர் அவ்வளவாக நோய்க்காளாகவில்லை. பிற்பாடு அரிசியைத் தீட்டுகிற வழக்கமும் சமையல் செய்யும்போது நீரில் கழுவிக் களைகிற வழக்கமும், கஞ்சி வடிக்கிற வழக்கமும் ஏற்பட்டன. இக்காலத்தில் மில்லரிசி வந்தபின் அரிசியின் தவிட்டுச் சத்து முற்றிலும் நீங்கிப் போகிறது. ஆகையால், நெல்லை வீட்டில் குத்திக்கொண்டு, அதைத் தீட்டாமலும், நீரில் களையாமலும், வடிக்காமலும், உண்ணுவதுதான் நன்றாகும்.

அரிசியை நீரில் களைந்தால் அந்நீரை உலை நீரில் கலந்து விடலாம். அரிசியை இரண்டு பங்கு தண்ணீரில் சமைத்தால், கஞ்சி ஏற்படாது; வடிக்க வேண்டிய தேவையில்லை.

அரிசியைக் களைந்த நீரில், அன்னத்தை வடித்தெடுத்த கஞ்சியை மட்டில் கரைத்து உண்டால், அன்னத்தைக் காட்டிலும் அது உடலுக்கு நன்மை. தரும். சத்திழந்த அன்னமானது உடலுக்கு நோயே தரும்.

மில்லரிசியைப் புழுக்கள் கூட நாடுவதில்லை. அதனால் அவ்வரிசியை மூட்டைகளில் கட்டிப் பல காலம் வைத்திருக்க முடிகிறது.

மில்லரிசியை விடக் குத்தரிசி மேல். ஆனால் குத்தரிசியையும் தீட்டித் தவிடு போக்கினால், அது மில்லரிசிக்கு நிகராகும். களைவதாலும், கஞ்சி வடிப்பதாலும், குத்தரிசியின் குணம் அற்றுப் போகும்.

ஆகையால் உடல் நலத்துக்குத் தேவையான காரியங்கள் பின் வருமாறு:—

(1) மில்லரிசியை விலக்கிக், குத்தரிசியை உண்ணுவது.

(2) குத்தரிசியைத் தீட்டாமல் விடுவது.

(3) சமைக்குமுன் அரிசியை நீரி லிட்டுக் களைவதை நிறுத்துவது.

(4) கஞ்சியை வடிக்காமலிருப்பது.

ஒரு கால் நெல்லை வீட்டில் குத்திக் கொள்ளக் கூடாமற் போனால், இரண்டு தடவையாக அரைக்கும் மில்லில் நெல்லை ஒரே தடவையாக அரைத்து, அதோடு நிறுத்திக்கொண்டு, அரைபடாமல் தங்கிப்போயிருக்கும் நெற்களைப் பொறுக்கி யெடுத்து அரிசியைத் தீட்டாமலும், களையாமலும், வடிக்காமலும் உபயோகிக்கலாம்.

மிகவும் லேசாயுள்ள மேற்பாசமுள்ள திரிகையிலும் (யந்திரம்) நெல்லை வீட்டிலேயே அரைத்துக் கொள்ளலாம் எவ்விதத்திலாவது நெல்லின் தவிட்டைக் காத்துக்கொள்ள வேண்டும்.

சத்துள்ள அன்னம், மற்ற அன்னத்தை விட அதிக சத்துள்ள தாகையால், அதிக மிதமாகவே உண்ணவேண்டும். மேலும், தவிடு நீங்காத அரிசியில் புழுக்கள் உண்டாகுமாதலால், அவ்வரிசியை அதிக நாள் வைத்திருக்க முடியாது. அப்போதைக்கப்போது மாதம் இருமுறை நெல்லைக் குத்திக் கொள்ளவேண்டும்.

## 3. அவல் 158888

நெல்லை அவலாகச் செய்துகொள்வதும் சிறந்த முறை. நெல்லை நீரில் ஊற வைத்து, ஊறின பின்பு அடுப்பின்மேல் மண் சட்டியில் வறுத்து, வெடித்துப் பொறியாகக் கிளம்பு முன் உரலிலிட்டு உலக்கையால் இடித்து, அவல் செய்ய வேண்டும். இப்படிச் செய்த அவலானது நெல்லின் முழுச் சத்துடனிருக்கும். ஆனால் அவலை அதிக காலம் வைத்திருந்தால் கெடும். புதிய அவல் உடலுக்கு நல்லது.

இதை அன்னமாக்க, மிதமான நீரைக் கொதிக்க வைத்து, அதில் அவலைக் கொட்டி, மறுபடி கொதி வந்தபின் இறக்கி அடுப்பருகே ஒரு நாழிகை வைத்திருக்கவேண்டும். இது சுவையுள்ள அன்னம். இதையே உண்டு வரலாம்.

## 4. நச்சுப் பொருள்கள்.

சத்திழந்த அரிசியின் அன்னம் போலவே நமக்குத் தீமை செய்யும் சிலவற்றையும் இங்கே குறிப்போம்.

வெள்ளைச் சர்க்கரையானது உடலிற்குப் பகையானது. அது இயற்கைக்கு மாறான முறைகளால் தயாரிக்கப்படுகிறது. வெல்லம், பனங்கற்கண்டு, பேரீச்சம்பழம் இவை உபயோகிக்கத்தகும்.

காபி, டீ (தேயிலைப்பானம்) இவையும் உடலுக்கு மாறானவை. இவற்றால் நோய்கள் ஏற்படுமென்று மருத்துவர் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். இவை கெட்ட பழக்கங்கள்.

பாக்கு, புகையிலை, தினுசுகள், கள் சாராயம், அபின், கஞ்சா முதலானவையும் நச்சுக்கள். புகையிலையைத் தூளாக்கி மூக்கில் உறிஞ்சினாலும், சுருட்டாகச் செய்து புகை குடித்தாலும், மென்றாலும் தீமைதான்.

## 5. மருந்தின்மை.

மேற்கண்ட ஒழுக்கங்கள் நோயின்மைக்கான ஒழுக்கங்களில் சிறந்தவை. இவ்வெல்லா ஒழுக்கங்களையும் கற்றறியவேண்டி இயற்கை வைத்திய நூல்களைக் கற்கவேண்டும். இதை எழுதுவோரால் ஆக்கப்பட்டுப் புதுக்கோட்டை, இயற்கை இல்லத்தி

# தொழிற் பகுதி

## நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையும் அவற்றை வளர்க்கும் முறைகளும்

[நடராஜன் B. A. பிள்ளையார்பாளையம் காஞ்சீபுரம்]

சென்னை இராஜதானியின்கண் வதியும் சுமார் ஆறு லக்ஷத்திற்கு அதிகமான எண்ணிக்கையையுடைய செங்குந்தர்களாகிய நம்மவர்களின் முக்கியமான தொழில் நெசவுத் தொழிலே யாகும். நம்மவர்களுள் செல்வாக்குடையோரில் பெரும்பாலோரது தொழில் ஜவுளி வியாபாரமே யாகும். நம்மவருள் பிறதொழில்களில் உள்ளவர் வெகு சிலரே. நெசவுத் தொழிலும் ஜவுளி வியாபாரமும் ஒன்றையொன்று பற்றுக்கோடாகப் பற்றியிருத்தலால் நம்மவர்கள் சீருற்றுச் செழிப் டற்றுச் செவ்வனே இருக்க வேண்டுமானால் ஜவுளி வியாபாரம் மிக்க உன்னத நிலையிலிருக்க வேண்டும்.

தற்சமயம் உலக முழுவதுமே வியாபாரமந்த மேற்பட்டிருப்பினும் ஜவுளி வியாபாரமும், நெசவுத் தொழிலும் க்ஷீணித்திருப்பது போல் வேறு எந்தத் தொழிலும் க்ஷீணிக்கவில்லை யென உறுதியாகச் சொல்லலாம். திடீரென ஜவுளி தினுசுகளின் விலை அதிகமாகக் குறைந்து விட்டது. சுமார் குறைந்தது முப்பது ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த சுத்தப் பட்டுச் சேலைகளெல்லாம், இருபது ரூபாய்க்குக் கூடக் கேட்பாரில்லாமல் கண்ணடி பீரோக்களில் கடைகள்தோறும் குவிந்து கிடக்கின்றன. சாதாரணமாக இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் விற்று வந்த 40. நெ. ஆறுமுழக் கொத்துக்களெல்லாம் ஒரு ரூபாய்க்குக் கூடக் கேட்பாரில்லாமல் கடைத் தெருவுகளில் அல்லற்படுகின்றன. மலேய தீபகல்பத்திலிருந்து கிட்டத்தட்ட அறுபதினாயிரம் கூலிகள் இந்தியாவிற்குத் திரும்பிக் கப்பலேற்றப்பட்டதால் அவர்கள் இந்தியாவிலிருந்து வரவழைத்து உடுத்தி யிருந்த லுங்கித் துணிகளெல்லாம் செலவில்லாமல் கிடக்கின்றன. வாரந்தோறும் ஆயிரக்கணக்கான, லுங்கித் துணிகளைக் (கைலிபீஸ்) கப்பலில் ஏற்றி வந்த கைலி வியாபாரிகள் தங்கள் கடைகளை மூடும்படியான காலம் வந்து விட்டது. அசல் நார்பட்டுச் சேலைகள் எல்லாம் குறைந்த விலைக்குக் கிடைக்கவே, நூல் சேலைகளை வாங்குவோர் குறைந்து விட்டனராதலால் நூல் சேலை வியாபாரிகளுக்கும் வியாபார மந்தம் ஏற்பட்டு விட்டது.

மேற் சொன்ன விதங்களில் ஜவுளி வியாபாரம் க்ஷீணித்திருப்பதால் நம்மவர்களின் நெசவுத் தொழிலும் சீர்கேடுற்ற நிலையி லிருக்கின்றது. மேற்சொன்ன காரணங்களால் நமது தொழில் க்ஷீணித்திருப்பதோடுகூட நம்மவர்களிட முள்ள பல ஊழல்களால் ஜவுளி வியாபாரமும் க்ஷீணிக்க ஆரம்பித்து விட்டதெனச் சொல்லலாம். நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நம்மவர்களின் தற்கால நிலை யெவ்வாறிருக்கின்றதெனில் முன்னால் நாள் ஒன்றுக்குக் குறையாமல் ஒரு ரூபாய் சம்பாதித்தவர்கள் இப்பொழுது நான்கு அணா கூடக் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். பட்டுச் சேலைகள்



விலை குறைந்து விட்டதால் பட்டுச் சேலையின் கூலி மிகக் குறைந்து விட்டது லுங்கித்துணி நெய்து கொண்டிருந்தோர் தங்கள் வேலையை அடியோடு இழந்தனர். சாதாரணமாக 40. 60 நெம்பர் நெய்து கொண்டிருந்தவர்கள் தங்கள் துணியைக் கேட்பாரில்லாமல் போய் விட்டதால் இரண்டணாவோ, மூன்றணாவோ லாபம் கிடைத்த வரையில் விற்று விட்டு வீட்டுக்குத் திரும்புகின்றனர்.

நெசவுத்தொழி லிவ்வாறு கெட்டதற்கு நம்மிடமே பல குற்றங்களுள. நம்மவர்கள் சிறிது லாபத்திற்கு ஆசைப்பட்டுப் பெருத்த நஷ்டமடைகிறார்கள். துணிகளைச் சரியான நீளத்தில் நல்ல சாயமுள்ள நூலோடும் பட்டோடும் தயாரிப்பதில்லை. ஆறுமுழக் கொத்து என்றால் அதைக்கு ஐந்து முழங்கூடத் தேருவதில்லை. பட்டு என்று சொல்லி டைமண்ட் நூலைச் சரசமாக வாங்கி யுபயோகிப்பதால் ஒரு தரம் நமது துணியை வாங்குபவர்கள் இரண்டாந்தரம் வாங்குவதற் கில்லாமற் போய் விடுகின்றது அதுவுமல்லாமல் சரியான எண்ணிக்கையின்படி நூலை யுபயோகிப்பதில்லை. 60 நெம்பர் துணியென்று சொல்லிவிட்டு 40. நெ. நூலை யுபயோகிப்பது வழக்கம். நூலும் வேலையும் மிகுதியாகுமென்று நினைத்துத் துணியை மிகவும் விலர்த்தியாக நெய்வதாலும் மேற்சொன்ன பல ஊழல்களையும் கடைக்காரர் அறிந்து கொள்வதாலும் அவர்கள் நம் துணிகளை அதிகக் குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள். மூடத்தனமாகச் சொற்ப லாபத்திற்கு ஆசைப்பட்டுப் பெரு நஷ்டத்தையடைந்து நாணயத்தையும், யோக்கியதையையுமிழந்து நம்மவர்களுடைய துணி இழிவுக்காளாகி வாங்குவாரின்றிக் கிடக்கின்றது.

அதுவுமல்லாமல் சுமார் 20. வருஷ காலமாக உபயோகத்திலிருக்கும் மெஷின் தறி (flying shuttle) யில் வேண்டிய அளவுக்குமேல் துணிகள் உற்பத்தி யாக்கப்படுகின்றன. சாதாரணமாகக் கைத்தறியில் (Hand loom) இரண்டு நாளைக்குள் ஒரு ஜதை வேஷ்டி நெய்து வந்ததற்குப் பதிலாக இப்பொழுது இரண்டு நாளைக்குள் மூன்று ஜதை வேஷ்டி தயாராகின்றது. ஆனால் அப்படி அந்தத் துணிகளை யுடுத்துவாரோ ஒன்றிற்கு மூன்றாக அபிவிர்த்தியாகவில்லை. அதற்குமாறாக நமது துணியை யுடுத்துவோர் எண்ணிக்கை, குறைந்து விட்டது. மெஷின் தறியினால் தயாரிக்கப்பட்ட துணிகளோ நெசவு நன்றாக விராததாலும், தறியிலேயே நூலானது தேய்ந்து பூத்துப் போய் விடுவதாலும் உடுத்த மூன்று மாதத்திற்குள்ளாகக் கிழியவாரம்பித்து விடுகிறது.

இஃதேயன்றி நமது தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகி விட்டதால் நம்மவர்களுடைய ஊதியம் குறைந்து விட்டது. நெய்தற் றொழிலையே குலத்தொழிலாகக் கொண்டுள்ள நம்மவர்களும், சாலியர்களும், சேணியர்களும் தவிர மற்ற குலத்தினராகிய, அகமுடையார், யாதவர், வன்னியர் முதலிய ஹிந்துக்களைத் தவிர பல மகம்மதியர்களும் நெய்தற் றொழிலையே தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்டமையால் நம்மவர்களுள் பலர் இனிப் பிறதொழிலைத் தேடும்படியான நிலைமை வந்துவிட்டது.

இக்காரணங்களை யொழிய மற்றும் பல வேறு காரணங்களாலும் நமது தொழில் க்ஷீணித்து விட்டது. அவைகளை விரிக்கிற் பெருகும். அன்னிய நாட்டுத் துணிகள் அதிக மலிவான விலைக்கு வந்து விட்டன. உதாரணமாக "22 x 22" சலவை மல் கெஜம் 1-க்கு ஆறு அணாவுக்குக் குறைந்து கிடைக்கின்றது. உள்நாட்டு மில் துணிகளும் மிக்க நாணயமானவையாகவும் சரசமாகவும் கிடைக்கின்றமையால் நமது துணிகளை வாங்குபவர்களுடைய எண்ணிக்கை குறைந்து விட்டது. கராச்சி, பனாரஸ் பட்டுச்சேலைகள் மிகவும் மெல்லியவாகவும், தற்கால நாகரீகத்திற்கு ஏற்றாற்போலு மிருப்பதாலும் நாகரீகம் மிகுந்துள்ள இக்காலத்தில் பெண்கள் நமது தென்னிந்தியாவில் தயாராகும் பட்டுச் சேலையை யெடுக்க விரும்பவில்லை.

இவ்விதமான சீர்கேட்டினின்றும் நமது வியாபாரத்தையும், நெசவுத் தொழிலையும், பழைய உன்னத நிலைமைக்குக் கொண்டுவர நம்குலச் சிகாமணிகளும், நமது சங்கங்களும், மகா நாடுகளும் பிரயத்தனப்படுதல் இன்றி யமையாதது. நம்மவர்களின் வறுமையை முன்னால் நீக்கினால்தான் நம்மவர்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றத்துக்கு வர முடியும்.

நமது தொழிலை முன்னுக்குக் கொண்டுவர முதன் முதலாக நம்மவர்கள் தங்களிடமுள்ள குற்றங்களையும், ஊழல்களையும் நீக்குதல் அவஸ்யம். கூடியவரையும் மெஷின் தறிகளை விட்டுவிட்டுக் கைத்தறியிலேயே நல்ல நூலையும் பட்டையும் சரியான கெட்டிச் சாயங்களையும் உபயோகப்படுத்தி ஆறுமுழ மென்றால் சரியாகவே ஆறுமுழ நீளம் வைத்துத் துணிகளைப் பார்ப்போர் மனதைக் கவருமாறு அழுத்தமாக நெய்தல் வேண்டும். நமது துணிகள் இழந்திருக்கும் யோக்கியதையை நமது வேலைத்திறத்தால் மறுபடியும் பெறும்படிச் செய்யல் வேண்டும்.

தற்கால நாகரிகத்தையும் உலகத்தின் போக்கையும் ஒட்டி அடிக்கடி வெவ்வேறு புதிய தினுசுகளை உற்பத்தி செய்ய வேண்டும். பழைய ரகங்களையும், தற்காலத்திற்கு ஒவ்வாத பழைய வழக்கங்களையும் அறவே நீக்கல் நலம். நம்மவர்களில் போதிய கல்வியறிவுடையோர் பல நெசவுத் தொழிற் சாலைகளுக்குச் சென்று அங்கு உண்டாக்கப்படும் பலவித ரகங்கள் எவ்வாறு உற்பத்தியாக்கப்படுகின்றன என்று அறிந்து நம்மவர்களையும் அம்மாதிரி தினுசுகளைத் தயாரிக்கப் பழகுதல் வேண்டும். நம்மவர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் நகரத்திலிருந்தும் வருஷந்தோறும் சிலரைச் சென்னையிலுள்ள நெசவுத்தொழில் போதிக்கும் பாடசாலைக்கு (Government Textile Institute) அனுப்பிப் புதிது புதிதாக வந்துள்ள துணிகளை நெய்

(101-வது பக்கத் தொடர்ச்சி)

லிருந்து வெளியாயிருக்கும் இயற்கை வைத்திய நூல்களின் விளம்பரத்தை இதன் கடைசி ஏட்டில் காண்க.

நோயின்மைக்காக எல்லா ஒழுக்கங்களிலும் முக்கியமாயுள்ளது மருந்தின்மை. சிறு நோய்கள்—காய்ச்சல் முதலானவை-திட தேகிகளுக்கும் வருவது இயல்பு. வருவதால் யாதொரு குறையுமில்லை. ஆனால் ஒருவாறு நன்மையே. இந்நோய்களால் உடலின் பழங் கசடுகள் கழிந்து, நாடிகளும் இரத்தமும் சுத்தமடையும். ஆனால் இயற்கை வைத்திய முறைகளால்—மருந்துகளின்றி—இந் நோய்களைத் தீர்த்துக்கொண்டால் தான் இந்நன்மைகள் ஏற்படும். செயற்கை வைத்திய முறைகளால் தீய பயன்களே ஏற்படும்.

இயற்கை வைத்தியமானது செயற்கை வைத்தியங்கள் போலல்ல. அது எளிதாய்க் கற்றுக்கொள்ளக்கூடியது. அபாயமற்றது. அவரவர் தமக்குத் தாமே மருத்துவராயிருந்து வாழ்ந்து, உண்மையான சுகமும், நீண்ட ஆயுளும் நற்சந்ததியும் பெறுவதற்குச் சாதனமாயுள்ளது.

ஆகையால் இதைப் படிப்போர், தமக்காகவும், தம் குடும்பத்துக்காகவும், இயர்கை வைத்திய அறிவைப் பெறவேண்டும்.

மருந்தின்மை என்ற ஒன்றினாலேயே பெண்மகள் மக்களை வளர்த்து ஆளாக்கி விட முடியும். மருந்துகளால் நோய்களைத் தீர்த்துக்கொள்ளும் ஆசை பகற்கனவே. இதன் விவரங்களைப் பூர்ண சக்தி என்னும் நூலில் மருந்தின்மை என்னும் அதிகாரத்திற் காணலாம்.

யும் விதத்தைக் கற்றுக்கொண்டு வரும்படிச் செய்தல் அவஸ்யம்.

நமது மக்களிடையே மற்ஒரு கொடிய வழக்கமிருக்கின்றது. ஆனால் நம்மவர்கள் ஏழ்மையை உத்தேசிக்கின் அஃது கொடிது என்றும் சொல்வதற்கில்லை. என்னவெனில் நம்மில் அநேகர் அன்ருட வரும்படியை யெதிர் பார்ப்பவர்கள். அவர்கள் தாங்கள் பகலில் நெய்த துணியை யெடுத்துக் கொண்டு கடைக்குச் சென்று விற்று விட்டுச் சாப்பாட்டுச் சாமான்களை வாங்கி வருவது வழக்கம். எப்படியாவது தங்கள் சாப்பாட்டிற்கு வந்த வரையில் போதுமென்று கடைக்காரன் கேட்ட குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். ஒரு நாளைக்குத் துணி விற்க வில்லையானால் மறுநாள் சாப்பாட்டுக்குக் கஷ்டம். ஆகையினால் குறைந்த விலைக்குக் கேட்கும்போது தாங்கள் தயாரித்த துணிகளை நிறுத்தி வைத்தால் கடைக்காரன் தனது வியாபாரத்தின் பொருட்டுச் சில நாள் பொறுத்தேனும் உயர்ந்த விலைக்குக் கேட்பானென்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. இக்குறையை நீக்குவதற்கு நம்மவர்களிடம் ஒரு கட்டுப்பாடும், ஒற்றுமையும் இருக்க வேண்டும். பலவகைத் துணிகளையும் குறிப்பிட்ட விலைகளுக்குக் குறைத்து விற்கக் கூடாதென ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அக்குறித்த விலைக்குக் குறைவாகக் கடைக்காரர்கள் கேட்டால் விற்காமல் நிறுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். அம்மாதிரி நிறுத்தி வைத்துக் கொள்ளுங்காலையில் தங்களுடைய குடும்பச் செலவையும், நூல், பட்டு முதலியவைகள் வாங்க வேண்டியதற்கும் தங்கள் தொழிலில் முதல் கொஞ்சம் அதிகமாக வைக்கவேண்டும். அப்படி முதல் வைத்தில்லாதவர்களுக்கு நமது செல்வந்தர்கள் கடன் கொடுத்துதவி அவர்கள் நிறுத்தி வைத்த துணிகள் விற்ற பிறகு தாங்கள் கொடுத்த கடனை வாங்கிக் கொள்ளுதல் நலம். இவ்வகையில் உதவி செய்வதற்குக் காருண்ய கவர்மெண்டார் நம்மவர்கள் வதியுமிடங்களில் நம்மவர்கள் மிக்க அனுகூலம் அடையுமாறு ஐக்கிய நாணய சங்கங்களை யேற்படுத்தல் மிக்க அவஸ்யம்.

கடைசியாக நம்மவர்களில் பலரிடமுள்ள பொருமைக் குணம் ஒன்று ஒழியவேண்டும். நம்மவர்களுள் யாராவது ஒருவர் ஒரு புதிய மாதிரியான துணியைத் தயாரித்து அதிக விலைக்கு விற்று லாபமடைந்தால் அவனைக்கண்ட மற்றவர்கள் அதே மாதிரி தாங்களும் தயாரித்துக் குறைந்த விலைக்குப் போட்டி போட்டு விற்கிறார்கள். இதனால் அப்புதிய தினுசுக்கு இருந்த மதிப்பே போய் லாபமும் மிகக் குறைந்து விடுகிறது. ஒரு ஊரிலுள்ள நம்மவர்கள் பலவிதத் துணிகளைத் தயாரித்தால் ஒரே மாதிரியான துணியைத் தயாரிப்பதைவிட அதிக விலைக்கு விற்று லாபமடையலாம்.

மேற்கண்ட முறைகளைப் கைப்பற்றினால் நமது தொழில் விருத்தி யடையும். நம்மவர்களது வறுமையும் நீங்கும். வறுமை நீங்கினால் நாம் முன்னேற்றமடைய வெகு சுலபமாயிருக்கும். எல்லாம் வல்ல அறுமுகப்பெருமான் துணை புரிவாஞக.

---


# மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,

தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்

**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு **8** தபாற் செலவு அணு **3**

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
17 பவழக்காரத் தெரு, சென்னை.





## மாதரொழுக்கக் கும்மி

[திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள் கண்டாச்சிபுரம்.]

(மித்திரன், தொகுதி 5, பகுதி க, உ 40-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரிப் பதிலோ ரன்னையைப் போலவும்
அமைச்சரைப் போன்மதி கூறுவதில்
தாதியைப் போலவும் பணிவிடையில் வெகு
சரசமாய் தாசிபோ லீலை செய்வீர். 21

செய்வ திதுதர்ம பத்தினி செய்கையாம்
சேயிழையீர்! வேத சம்மதமாய்
உய்வதுமுண்டாகு மனவாக்குக் காயத்தா
லுண்மையாய்ப் பதியைப் பூசித்திடில். 22

பூசித மாயிஷ்ட தேவதை யான்றோர்கள்
புண்ணிய நல்விழா தீர்த்தங்களும்
ஆசையுடன் பார்க்க வேண்டிடில் நாயகன்
அநுமதி தான்பெற்றுப் போய் வருவீர். 23

போய்வருவீர் தக்க பெண்க டுணையுடன்
பொல்லாங்கு யாதொன்றும் வாராமல்
சேயினை யாகிலு முடனெடுத் துச்சென்று
சீக்கிரம் வீடு திரும்பிடுவீர். 24

திருவாகும் வாயிற் படியுர லம்மிமேல்
சேருமு லக்கை முறமீ தும்
பெருவாழ் வகன்றிடு முட்கார்ந்திடில் வெகு
பீடைகள் தான்வந்து சேரு மடி. 25

சேர்ந்திடு நற்றிரு செல்வமு முண்டாகுஞ்
சேயிழையீர்! மஞ்சள் குங்குமத்தை
ஆர்வமாய்ப் பூசிநற் புஷ்ப மணிந்திடில்
ஆயுள் பெருகுறும் புருஷருக்கே. 26

புருடனழகின்றி வறியனாய் வாய்ப்பினும்
பூவையரே! மூடன், மூப்பனேனும்
அருவருப் பின்றி யவனுடன் வாழ்தலே
யரிவையர் தங்கட னாகு மடி. 27

ஆகாது பூப்பா யொதுங்கிடு நாட்களி
லன்பாய்க் கணவரைக் கூடு வது
பாகுமொழியினீர்! பூப்புநாள் மூன்றிலும்
பர்த்தா முகத்தினைப் பாராதீர். 28

பார்மீதில் கண்ணகி மதுரை யழித்ததும்
பரிதி யெழாமல்ந ளாயினி செய்ததும்
வார்வே டனைத்தம யந்தி யெறித்ததும்
மங்கையரே! கற்பின் மகத்துவ மாம். 29

கற்பெனப் படுதல் சொற்றிறம் பாமையாம்
கழறுமி தௌவையின் வாக்கல வோ
சிற்பர னாகிலுங் கற்புடை மங்கையர்
செயலினுக்கஞ்சியே சென்றிடுவர். 30

சென்றவெளியினில் வந்த புருடனை
சிரம பரிகாரந் தான்செய்து
நன்றாகப் போய்வந்த விவரங்க ளையெல்லாம்
நங்கையரே! கேட்டுப் பின்தெளிவீர். 30

தெளிவாக வீட்டு விவகாரம் நாயகன்
சித்தத்திற் கிணங்கச் செய்துவிட்டு
களிகூர யாவரு மில்லற தர்மத்தைக்
கைக்கொள்ளுவீர் மைக்கண் தோகையரே! 32

தோகையரே! வந்த அதிதிசன் யாசிகள்
தொழிலாளி கூலிபிச் சாண்டிகளை
ஈகை குணத்துடன் காக்கவைக் காமலே
ஏற்றவா றமுதிட் டனுப்பிடு வீர். 33

அனுவாச மாகக் கொழுந்தன்மூத் தாரொடு
அவர்கள் மனைவியா மோரகத்தி
சனுவாக வெப்போதுஞ் சுற்றத்தவருடன்
சந்ததம் வாழுவீ ரொற்றுமையாய். 34

ஒற்றுமையில்லாக் குடும்பங் கெடுமென்று
ஓதும்பழமொழி தானுணர் வீர்
குற்றம் பார்க்கிற்சுற்ற மில்லையிங் காதலால்
கொள்ளுவீர் சமரச மாயெவையும். 35

சமரச சன்மார்க்க மோங்கவேண்டு மென்று
தையலரே! கும்மியடியுங்கடி
தமராக யாவர்க்குந் தாழ்வு சொல்லியிந்தத்
தரணியுள் நெடுநாளே வாழுங்கடி. 36

வாழையடி வாழையா யுங்கள் வம்மிசம்
வையகந்தன்னில் வளர்ந்தோங்க
ஏழை எளியவர் கூன்குருடு முடம்
எல்லோர்க்கு மன்ன மளியுங்கடி. 37

அளிவளர் கூந்தலிர்! அன்னவலையினி
லரன்வந்து சிக்குவனென்று சொல்வார்
தெளிவாக விந்நீதி வாக்கியத்தின் பொருள்
தேறுங்கடி வரங்கோருங்கடி. 38

கோருங்கடி யுங்கள் கணவன் தீர்க்காயுளை
குங்கும மஞ்சள் சுமங்கலத்தை
சீறுங்கடி கெட்டலோபம் பொய்வஞ்சனை
தீயர்கள் நேசம் பொறாமைகளை. 39

களையுங்கடி கெட்ட குணங்களை வேரறு
காருங்கடி யுங்கள் கற்பு நிலை
விளையு மடிசுக மிதனால்நற் பேரோங்கி
வீசுமடி புக ழுலக மெங்கும். 40

---




## இந்திய சாலியர் மகாநாடு

(28-4-31 தமிழ் நாட்டில் கண்டது)

விருதுநகர், ஏப்ரல், 23—

நான்காவது அகில இந்திய சாலியர் மகாநாடு 21-ந்தேதி இராஜபாளையத்தில், மாயவரம் கூறைநாடு மிராசு ஸ்ரீ. கே. எஸ். சுந்தரஞ் செட்டியார் தலைமையில் கூடியது. மகாநாட்டிற்குப் பல இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். வரவேற்புக் கழகத் தலைவர் அருப்புக்கோட்டை ஸ்ரீ. த. ல. குருசாமி விஜயம் செய்திருந்தவர்களைத் தன்னுடைய உபந்நியாசத்தால் வரவேற்ற பின்னர் சென்னை மாகாண அபிவிருத்தி இலாகா மந்திரி ஸ்ரீ. பி. டி. இராஜன் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

### மந்திரி ஸ்ரீ. ராஜன் பிரசங்கம்:

மந்திரி ஸ்ரீ. பி. டி. ராஜன் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கையில் பேசியதாவது:—

நாடெங்கும் தேசாபிமானம் பரவித் தேசப்பொதுச் சேவையில் ஈடுபடத் தொடங்கும் சமயத்தில் இது போன்ற சமூக மகாநாடுகள் எதற்கெனச் சிலர் வினவலாம். ஒவ்வொரு சமூகமும் அதனதன் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், வகுப்பு சண்டைகளுக்கும் இடங்கொடாது ஒவ்வொரு துறையிலும் அதாவது, கல்வி, வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றில் போட்டி போட்டு முன்னேறினாலன்றி, நூற்றுக்கணக்கான சமூகங்களும் கிளைச் சமூகங்களும் கொண்ட நம் நாடு விரைவில் முன்னேற வேறு சிறந்த மார்க்கமில்லை. சமூக அபிமானம் ஏற்பட்டு விருத்தியானால் தேசாபிமானமும் தானாகவே ஏற்பட்டுவிடும். தேச முன்னேற்றத்தின் முதல்படி சமூக முன்னேற்றமாகும். அந்த உன்னதமான சமூகத் தொண்டாற்ற நீங்கள் இவ்விடம் இன்று கூடியிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். மகா நாடுகள் கூடிக் கலைவதால் மட்டும் ஒரு பிரயோஜனமும் ஏற்பட்டு விடாது. அங்குத் தீர்மானிக்கப்படும் விஷயங்களையெல்லாம் அமுலுக்குக் கொண்டுவரச் செய்ய நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையில் முயற்சி செய்யவேண்டும். உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் நம்மிந்திய நாடு ஒன்றுதான் கல்வியில் மிகவும் கேவலமான நிலைமையிலிருக்கிறது. மேல் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுதப் படிக்கத் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் நூற்றுக்கு ஒன்பதுபேர் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். அதுவும் தனிப்பட்ட நான்கு லக்ஷம் ஜனத்தொகையைக் கொண்ட உங்கள் குலத்தை மட்டும் எடுத்துக் கணக்கிட்டுப் பார்ப்போமானால் விரல்விட்டு எண்ணிச் சொல்லி விடக்கூடிய அவ்வளவு சொற்பமானவர்களே இருப்பார்களென்று நினைக்கிறேன். அவ்வளவு கேவலமான நிலைக்கு வந்ததின் காரணம் பையனுக்கு ஐந்து வயது பூர்த்தியாகு முன்னரே நெசவுத் தொழிலில் புகுத்தி வேறு வழியில் புத்தியைச் செலுத்த முடியாதபடி வருத்துவதே. ஆகையால் கட்டாய ஆரம்பக் கல்வியை ஒவ்வொரு ஊரிலும் புகுத்தவேண்டும். அதற்குக் கவர்ன்மெண்டார் உதவியைக் காட்டிலும் உங்களுடைய பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால் கூடிய சீக்கிரத்தில் உங்களுடைய வாலிப உலகம் பூராவும் நூற்றுக்கு நூறு பேர் கற்றுணரவகை யேற்படும். கல்வி கற்பிப்பதின் நோக்கம் உத்தியோக வேட்டைக்கன்றி அறிவு வளர்ச்சிக்காகவும் தொழிலபிவிருத்திக்காகவும் இருத்தல் வேண்டும்.

### இதற தொழில்கள்.

மற்றைய சமூகங்களைப் போலல்லாது உங்கள் வகுப்பினர் அனைவரும் நெசவுத் தொழில் ஒன்றையே பிரதானமாகக் கொண்டிருப்பது சற்று ஆலோசிக்கப்படவேண்டிய விஷயமாகும். அதன் காரணம், அதை உலகுத்தொழில் எனப்பெரும் பாலோர் நம்புவதே. மற்றைய பலவிதக் கைத்தொழில்களை மேற்கொள்ள எல்லாவிதமான சாதனங்களிருந்தாலும் அவைகளை விடுத்துக்கண்மூடித்தனமாக ஒரு குறிப்பிட்ட தொழிலிலேயே ஈடுபடுவது அறியாமையாகும். அவ்வாறு ஒரு சமூகம் சாதித்தொழில் எனக் குறிப்பிட்ட ஒரே தொழிலையே மேற்கொள்ளுமானால் அதைவிட அதன் சமூகத்திற்கும் நாட்டிற்கும் தீங்கு வேறு ஒன்றுமில்லை. சிலருக்கு விருப்பாக இருப்பது மற்ற ஒரு சாராருக்கு வெறுப்பாக விருக்கலாம்; சிலர் விவசாயத்தில் தகுதியுள்ளவராயிருக்கலாம். ஒரு சிலருக்கு இயந்திரப் பயிற்சியில் பற்றிருக்கலாம். மற்றும் சிலருக்குப் பல் வேறு வகைக் கைத்தொழிலில் தேர்ச்சி யிருக்கலாம். ஆகையால் நெசவுத் தொழில் ஒன்றுதான் கடைப்பிடிக்க வேண்டியதென் றிராமல் அவரவர் விருப்பத்திற்குத் தகுந்த தொழிலை மேற்கொள்ளுமாறு செய்வதுதான் சிறப்புடையதாகும். ஏனைய நாடுகளிலெல்லாம் நெசவுத்தொழில் முன்னேற்ற மடைந்திருக்க நம் நாட்டில் இன்னும் இவ்வித கேவலமான நிலையிலிருப்பது எதனால்? சுயநாட்டு ஆதரவின்மையும், முன்னேற்றத்திற்கான முயற்சியின்மையும், தொழிலாராய்ச்சி இல்லாமையும் தான் காரணங்கள். பண்டைக்கால வழக்கப்படி இன்னும் இவ்விருபதாம் நூற்றாண்டில் கைநெசவுத் தொழிலையே கையாண்டு வந்தால் எவ்வாறு முன்னேற முடியும்? எவ்வாறு ஊதியம் கிடைக்கும்? மனிதனால் இயந்திரத்துடன் போட்டி போட முடியுமா? ஆகையால் இனிமேலாவது இயந்திர நெசவுத் தொழிற்சாலைகளை அமைக்கவும், நவீன சாயச் சாலைகளை மேனாட்டு முறைப்படி அமைக்கவும் முன்வரவேண்டும்.

### கூட்டுறவுச் சங்கம்.

கூட்டுறவுச் சங்கங்களின் அவசியத்தைப் பற்றிச் சிறிது சொல்ல விரும்புகிறேன். "தன் கையே தனக்குதவி" என்பதுபோல உங்களில் பிரபல பணக்காரர் தங்களால் இயன்றவரை பங்குகள் மூலமாய்க் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபனம் செய்தல் வேண்டும். சர்க்கார் இது விஷயத்தில் உதவி செய்ய எப்பொழுதும் தயாராக விருக்கிறார்கள். ஏழை நெசவுத் தொழிலாளருக்கு வேண்டிய கடன் கொடுத்துதவுதல், அவர்கள் சேமிக்கும் பணம் சிறிதாயினும் அதில் பங்காளராய்ச் சேரும்படிச் செய்தல், உற்பத்தி செய்த துணிகளைத் தகுந்த இடங்களில் விற்பனை செய்தல், இதுபோன்ற இன்னும் பல காரியங்களைச் செய்தால் ஏழை மக்களின் வறுமை ஒருவாறு நீங்கும். பணக்காரருக்கும் மேற்கூறிய கூட்டுறவுச் சங்கங்களால் அதிக வருமானம் கிடைக்கக்கூடும். ஆகையால் எங்கெந்தவிடங்களில் அமைக்க முடியுமோ அந்தந்த விடங்களில் உடனே சங்கங்களை நிறுவவேண்டும்.

### குருட்டுப் பழக்கங்கள்.

சாதாரணமாக நம்மிடையே பழைய குருட்டுப் பழக்க வழக்கங்கள் இன்னமும் இருந்து வருகின்றன. அவைகளை யெல்லாம் அறவே ஒழிக்க முயலவேண்டும். அர்த்தமற்ற வீண்சடங்குகள், அதற்காக ஏற்படும் பணச்செலவு, கல்யாணங்களில் வரையில்லாது கண்மூடித்தனமாய் பிரயோசனமற்ற வழிகளில் பணம் செலவழித்தல் முதலியவை நிறுத்தப்படவேண்டும். வயிற்றுக்கே சரிவரக் கஞ்சியில்லாவிடினும் நகைசெய்து அணிந்து கொள்ளுவதில் நம் மக்கள் பின் வாங்குவதில்லை. அதிலும் சுகாதார விதிகளுக்கு விரோதமாக சில சமயம் உயிருக்கே ஆபத்து நேரிடும் தன்மையில் நகை யணிந்து கொள்ளுவதை நாம் பார்த்துக்கொண்டுதா னிருக்கிறோம். காது கிழித்தல், மூக்கைக் குத்துதல், காலிலும் கையிலும் விலங்கு போன்ற கனமான காப்புக்களை யிடுதல் முதலிய வெறுக்கத் தக்க அநாகரிகமான காரியங்களை யெல்லாம் நிறுத்தவேண்டும். நகை யணிந்து கொள்ளுவதில் ஆண்களும் பெண்களுடன் போட்டியிடுவது வெட்கித் தலைகுனிய வேண்டிய காரியமாகும். இவ்வாறு நாம் உபயோகித்து வரும் நகைகளை மட்டும் நாணயமாக மாற்றினோமானால் அப்பெரிய தொகையைக் கொண்டே ஆயிரக்கணக்கான வேலையில்லா மக்கள் பிழைப்புக்குச் சாதனமாகத் தொழிற்சாலைகள் வைத்து நடத்தவும், கலாசாலைகள் நடத்தவும், பாங்கிகள் நடத்தவும் சாத்தியமாகும். ஆகவே பழைய மூடப்பழக்க வழக்கங்களை அகற்றி காலச்சக்கரத்தை நோக்கி மற்றைய நாடுகளைப்போல நாமும் எல்லாத் துறைகளிலும் முன்னேறவேண்டும்.

### தலைவர் பிரசங்கம்.

மகாநாட்டுத் தலைவர் மாயவரம் "கூறைநாடு மிராசு ஸ்ரீ. கே. எஸ். சுந்தரஞ் செட்டியார் அக்கிராசனப் பிரசங்கம் வருமாறு:—

சாலியர் மரபினைச் சான்றோர் சாலப் புகழ்ந்திருக்கின்றனர்! அரசர்களும் அன்புவைத்து அவர்களை ஆதரித்து வந்தனர். அவர்களும் வேத நெறி கொண்டவர்; உபநயன முதலிய வைதீக சமஸ்கார முடையோர். நான் மறை நூலறிந்தோர், முத்தமிழ் நூலுங்கொண்டோர். செய் தொழில்களில் நெய்தொழிலே உத்தமமென எற்றோர். குறையிலாச் செல்வர், கறையிலா மனத்தர், மானரக்ஷகர், உஞ்சை மாநகர், காம்பீலி நகர், புண்டரீக வர்த்தனபுரம், வாரணாசி, காஞ்சி எனும் ஐம்பதி உடையோர். யானை, சிங்கம், சரபம், புலி ஆகிய நால்வகை விருதுகளும் பரமசிவனால் அருளப் பெற்றவர். பூணூல் மார்பர், இன்சொல் நாவர், வண்மைக் கையார், மெய்மறவாதவர், கபடமிலார், அறவேலி கோலி அதன் நடுவிலிருப்போர். வேத நெறி பிறழார், பொய்யுரை யாடார், நெய்தொழில் மறவார், தேவாலய பரிவட்டம் அளிப்போர். மடாலயங்களுக்கோர் உறவானவர். அன்னதானப் பிரியர், பத்திநெறி பூண்டோர், முத்திநெறி வந்தோர், வாயுள்ளார் பாடல் பெற்றவர், அபயமளிக்கும் அன்பாளர்.

"கண்டபேரண்டரான வண்மை செறிகின்றன காம்பீலி நாட்டின் விற்பன்னர், கருணைசெறி வடகங்கை ஆரியர், உமைக்குக் கஞ்சமலராடை அருள்வோர், மண்டலாதீசர், புலவர் தலையோர், புகழை வாரியே கொண்டவர், வண்மை குன்றாத பெரியோர், அண்டினவர் அளிக்க அடையலருக்கு அஞ்சாத ஆண்பிள்ளைச் சிங்கம், ஒருசொல் அரிச்சந்திர வாசகர், சிம்புள் என்பதாகையர், சந்தணத்தார் மார்பர், தண்டமிழ்நூல் மரபுதழைத்தவர், தரணியில் தனதானமும் உடையோர், சகலகலாவல்ல

வர், நிபுணர் சாலிய மகிபாலரே” என வாயுளார் கூறியிருக்கின்றனர்.

ஆதியில் பிரம்மாதன் ஐந்து முகங்களில் தோன்றிய பத்துப் பிராமணர்களில், சாலீகன், சாலிணி, சாலியன், சாலங்காயன், சாலிகன் சாலிகோத்திரன், சலபவன், என்னும் எழுசாலிய முனிகள் தோன்றினராம். அவர்களைக்கண்டு களித்துப் பரமசிவன் அஞ்சுவர்ணமுள்ள பரிவட்டங்கள் செய்து தனக்குத்தர அவர்கட்குக் கட்டளையிட்டனராம். அவ்வேழு முனிவர்களின் பரம்பரையினர் அல்லவா நம்மவர்கள் எல்லோரும்? அது முதல் நம்மவர்கள் திரேதாயுகத்தில் ஓமப்புகையினாலும், கிருதயுகத்தில் தாமரை நூலினாலும், துவாபரயுகத்தில் பட்டு நூலினாலும், கலியுகத்தில் பருத்தி நூலினாலும், நால்வகை பரிவட்டங்கள் செய்து சிவனுக்கு அளித்து வாராநிற்கின்றனரே! சாலியர் சாபங்களும் தெய்விகமானவை. ஐந்து வர்ணங்களில் சிவப்பு—சிவன், மஞ்சள்—பிரம்ம தேவன், நீலம்—விஷ்ணு, பச்சை—பார்வதி, வெள்ளை—கங்கை, கூரைமாநாட்டிலே இந்த பரிவட்ட கைங்கரியங்களை அனேக பெரிய தேவாலயங்களுக்கு இன்றைக்கும் நடத்தி வருகின்றனர். அக்கைங்கரியங்களுக்கு ஏற்பட்ட மரியாதையும் பெற்று வருகின்றனர்.

## நஞ்சமூக நிலைமை.

இத்தகைய மரபினரின் தற்கால நிலைமையைச் சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும். நம்மவர்க்குள் இருந்த கட்டுப்பாடுகளும், ஒற்றுமை உணர்ச்சியும், தெய்வபக்தியும் ஜாதியபிமானமும், செய்தொழில் நேர்மையும், வித்தியாபிவிர்த்தியும், தாய் நாட்டன்பும், தர்ம சிந்தனைகளும் எவ்வாறு இருக்கின்றன என்பதை நீங்களே தனித்தனி யோசித்துப் பாருங்கள். மேற்குறித்த விஷயங்களில் சிரத்தை மிகக் குறைந்திருப்பதாகவே எனக்குத் தோன்றிய காரணங்களை யான் எடுத்துக்காட்டிப் பற்பலர் மனத்தைத் துன்புறுத்த வந்தேன் இல்லை. ஆயினும் பொதுவாக நவீன நாகரிகமெனப்படும் ஏற்பாடுகளில் பல, நம்மவர் பலரைப் பலவீனராக்கி விட்டன. போலிப் பெருமையின் ஆசையால் பொருளிழந்து வருந்துவோர் பலர். நீண்ட யோசனை இல்லாது கொண்ட காரியமும் பயன்படுமோ? மேனாட்டுப் பழக்கங்கள் பற்பல பரவி அநேகரைத் தவித்துத் தத்தளிக்கச் செய்து விட்டன. தற்காப்பை இழந்தவர் எதற்குத் தான் பயன் படுவார்? கல்விக் கிடையில் உயிரைக் கொடுப்பதில் மூடத்தனத்தை வெளிப்படுத்தி வாடிநிற்போர் சிலர். சோம்பித்திரியேல் என்னும் வாக்கை எட்டிலே வைத்து ஏங்கி நிற்போர் பலர். குடியரசை வேண்டிக் குடியரசையே பற்றிக் குடியழிந்தனர் சிலர். சாயமேற்றித் தழைப்பதை விட்டுச் சாயமிறங்கினர் பலர். நாட்டார் இவ்வாறு நமது முன்னோர் முறைகளை முற்றிலும் துறந்து இடுக்கண் உறுகின்றனமே!

## தேசீய உணர்ச்சி.

நமது நெய்தொழிற்படை கொண்டே மகாத்மா காந்தியும் சாத்வீக எதிர்ப்பைச் சாற்றியுள்ளார். அதன் அருமையும் பெருமையும் மண்டலமெங்கும் கொண்டாடப்படுகின்றதே! அதன் அகிம்சாவீர்யம் மன்னுயிர் மனத்தை யெல்லாம் கவர்ந்து நிற்கின்றதே! நமது ஆட்சியார் மனப்போக்கை அது அம்மயம் மாற்றிவிட்டதே! “க்ஷத்திரிய பலம் தீக், பிரம்ம பலமே பலம்” என்னும் இருஷிவாக்கின் மகிமை நிருபணமாயிற்றன்றோ? காந்தி இர்வின் சமாதானமும் நமது தொழிலின் பெருமையன்றே கொள்ளவேண்டும். நமது தாய் நாட்டு க்ஷேமமே நந்தொழில் நேர்மையைச் சார்ந்திருக்கிறதன்றோ? தேசீய உணர்ச்சி பெருகிவரும் இந்நாட்களில், நாமும் அவ்வுணர்ச்சிக்கு இடந்தரவேண்டாமா? நமது தொழிலைச் சீராக்கிப் பூர்வீக உயர் நிலைக்குக் கொண்டுவருவதே நம்மவர்கட்குத் தேசீய உணர்ச்சியாய் இருக்கின்றதே என்ற பாக்கியம் பார்த்தீர்களா? மானரக்ஷகர் என்னும் நமது மகிமைப் பெயரை நாம் என்றேனும் இழக்கலாமா? இந்த உண்மையை இம்மகாநாடு நன்கனே ஆராய்ந்து அறியவேண்டும். நந்தொழிலை நாமே சீர்படுத்தப் பார்க்கவேண்டும். ஆட்சியார் உதவியையே நாடி நிற்பதில் பிரயோஜனமில்லை. நமது கடமையை நாம் நன்கனே நடத்திவந்தால் எவ்வித உதவியுந் தானே வரும்.

## கல்விப் பயிற்சி.

இதன் குறைவு நம்மிடத்தில் குடிகொண்டிருக்கிறது. ஆடவர் பெண்டிர் அனைவருக்கும் இப்பயிற்சி தற்காலத்தில் இன்றியமையாத தாயிற்று. ஆண் கல்வியே நம்மிடத்து அருமையாய் இருக்க, பெண் கல்வியைப்பற்றி பேசவும் வேண்டுமோ? நாட்டார் கல்விப் பயிற்சி ஏற்பாடானது எவ்வாறிருக்கவேண்டும்? எந்த ஏற்பாட்டை நாட்டார் கட்டுப்படுத்தக் கூடியதோ, நாட்டுக் குழந்தைகள் எவற்றினுக்கும் எது இடம் கொடுக்கின்றதோ, எது நாட்டாரது பரமார்த்தப் பிரவர்த்தி என்ன, நன்னெறி முறை என்ன, புத்திப் பயிற்சி என்ன சரீர பயிற்சி என்ன, தொழிற் பயிற்சி என்ன, ஆகிய இவைகளை நாட்டார் தேவைகளுக்கு ஏற்ற வண்ணம், அபிவிருத்தி செய்யும் ஒரே நோக்கத்துடன் நடத்தப்படுகின்றதோ அதுதான்—அவ்வகை ஏற்பாடு நமக்கு இன்னும் ஏற்படத்தான் வேண்டி இருக்கின்றது. இராஜாங்க ஏற்பாடு இராஜாங்க சௌகரியத்திற்கே நடைபெற்று வருகின்றது. அதனாலேதான் தற்கால கல்விப் பயிற்சியில் நாட்டார்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகின்றது; அதனால் பற்பல தீமைகளும் விளைந்து வருகின்றன.

அது எவ்வாறாயினும் ஆகுக. நாம் நமது சிறார்களுக்கும் சிறுமிகளுக்கும் நமக்கேற்றபடி கல்விப் பயிற்சி கொடுத்து வரவேண்டும். அபரிமிதம் செலவை இழுக்கும் ஏற்பாடு நம்மவர்க்கு என்றுமொவ்வாது. நமது சமூகம் இன்றும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் நின்று வருகின்றது. ஆகையால் அதற்கொரு ஏற்பாடு நமக்குள் செய்யலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. பொதுவாய் நமது வாலிபர்களுக்கு எழுவயதிலேயே ஊதியந்தேடுஞ் சக்தி வந்து விடுகின்றது. அவர்களது சம்பாத்யமும் அவர்கள் குடும்பத்திற்கு வேண்டியே இருக்கின்றது. அத்தகைய சிறுவர்களுக்கென்று இராப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படவேண்டும். அதில் நமது ஜாதி ஆசாரம், பழக்கவழக்கங்களைப் பற்றி புகட்டவேண்டும். நமக்குள் தர்மச் செலவுக்கென்று ஒரு சொற்ப அம்சத்தை ஒதுக்கி வைத்து, இதற்கு ஒரு மூலதனமும் வெகு சுலபமாகத் தேடி விடலாம். கல்விகற்றவர்களும் நமது தொழிலை மறக்கலாகாது. ஆனது பற்றியே, நான் இந்த ஏற்பாட்டை எடுத்துச் சொல்லுகிறேன். சிறுவர்கள் 7-வது முதல் 14-வது வயது வரையில் பகலிற் றொழிலும், இரவில் கல்விப் பயிற்சியும் செய்து வரலாம். அதற்குமேல் படிக்க இயல்புள்ளவர் மேற்படி படிப்பிற்குப் போகலாம். அத்துடன் படிப்பை நிறுத்துபவர்கள் தொழிலை ஆரம்பிக்கலாம். நமது சிறுமிகளுக்குக் கட்டாயப்படிப்பு ஏற்படுத்த வேண்டும். இத்தகைய ஏற்பாட்டை நான் எனது ஊரில் அன்பர்கள் உதவியால் கொண்டு வரலாமென்று யோசிக்கின்றேன். மற்ற ஊர்களிலும் நம்மவர் இவ்வகை ஏற்பாடு ஒன்றைச் செய்து வந்தால் நலம் பிறக்குமென்று தோன்றுகின்றது. இந்த விஷயத்தை இம்மகாநாடு ஆராய்ந்து தக்கதொரு தீர்மானம் செய்து, இதனை நிறைவேற்ற முன்வருமென நினைக்கின்றேன்.



## செய் தொழில் தேர்ச்சி.

செய்தொழிலிலும் அன்னிய முறைகள் பற்பல அடுத்து வந்து அதையும் கெடுத்து வருகின்றனவே! ஒப்பிலா உபகாரியாகிய மகாத்மா காந்தியின் கத்தர், எத்தனை எத்தனை பேர்களைக் கதறச் செய்து விட்டதென்பதை நாம் நன்கு கவனிக்கவேண்டும். கூடியவரையில் சுதேசீயத்தையே நந்தொழிலுக்கு நாம் ஊட்டி வரவேண்டும். அப்பொழுது நமது தொழில் மீண்டும் சிறந்தெழுமே; நாடுஞ் செழித்திடுமே!!

நமக்குள் ஒற்றுமை உணர்ச்சியும், தேசாபிமானமும், மதாபிமானமும், பாஷாபிமானம், தன்னடக்கம், கட்டுத்தொழில், விடாமுயற்சி, பொறுமை, தைரியம் முதலியவைகள் பரவப் பரவ, இறைவன் அருளால், நமது சமூகமும் முன்னேற்றமடையும். ஆகையால் இராஜபாளையத்திற் கூடியிருக்கும் நாம் எல்லோரும் வாகைசூடி, பகைவென்று, வெற்றிகொண்டு, இராஜாதி மனத்துடன், சுயராஜ்யம் பெற்று நமது கொடியை நாட்டித் தழைக்கவும் ஜகதலமே ஓங்கிவரும்!

---

# நிருபம்.

## செங்குந்தரும் இரங்கூன் பிரயாண வழியில் ஏற்படும் சங்கடங்களும்.

### K. ஆறுமுக முதலியார் ரெங்கூன்.

பேரன்புடைய பெரியீர்.

நமது குலாபிமானத்திற்குத் தாங்களும் தாங்கள் போன்ற பெரியோர்களும் தம் நலங்கருதாது குலாபிமானமே பெரிதென உழைத்து வரும் தொண்டிற்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னமும் தாங்கள், நமது சமூகம் முன்னேற்றமடைவதற்குரிய ஏற்பாடுகளுக்கும் கைத்தொழில் மேன்மைக்கு வரக்கூடிய சீர்திருத்தங்களுக்கும் தங்களால் கூடுமானவரை பணி செய்வீர்களென்று நம்புகிறேன். நமது மரபினரில் பெரும்பாலோர் ரெங்கூனில் பலவிதத் துறைகளில் பிரபல வர்த்தகர்களாகவும் தொழிலாளர்களாகவும் இருந்து வருவது பலருக்கும் தெரிந்ததேயாகும். நமது தாய் நாடுகளிலிருந்து ரெங்கூன், சிங்கப்பூர், பினாங்கு முதலிய மலாய் நாடுகளுக்குச் செல்லும் நமது பிரயாணிகளும், இங்கிருந்து தாய் நாடு திரும்புகிறவர்களும், வியாபார சம்பந்தம், கோர்ட்டு விஷயம் முதலிய அலுவல்களை முன்னிட்டும் மத்தியஸ்தலமாகவும் துறைமுகமாகவும் விளங்கும் சென்னையில் சுமார் ஒரு வாரம் பத்து நாள் வரை தங்கிப் பிரயாணமாக வேண்டியதிருக்கிறது. அப்படித் தங்கும் போது ஆங்காங்குள்ள சாப்பாட்டு ஓட்டல்களிலும் வாடகை விடுதிகளிலும் தங்கிச் சரியான சௌகரியத்துடன் சாப்பாடு வகையறா கிடைக்காமலும் வீணில் அதிக பணச் செலவு ஏற்படுவதுடன் சில சமயங்களில் பிரயாணிகளின் சாமான்கள் களவு போவதுமுண்டு. இன்னும் பலவித கஷ்டநஷ்டங்களுக்கு உட்படுவதோடு இவ்வளவு காலமாய்ப் பிரயாணம் செய்து வருகிறோம். இனியும் நம்மவர்கள் அவ்வித கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படாத முறையில் இவைகளை நிவர்த்திப்பான் வேண்டி நமது தலைச் சங்கமும் மித்திரனாபீசும் அமைத்திருக்கும் இல்லத்திலேயே நம் குல மரபினர்கள் வந்து தங்கும்படியும் சாப்பாடு முதலிய வசதிகளும் ஹாஸ்டலைப்போல் ஒரே ஜாகையிலமைத்து மேற்குறித்த வீண் செலவுகளையும், சௌகரியக் குறைவையும் நிவர்த்திக்கக் கூடிய விரைவில் முன்வரவேணுமாய்க் கேட்டுக்கொள்வதோடு எதிர்கால நமது உபகாரச்சம்பள கல்வி நிதிக்கும் ஒரு பிரவேசக் கட்டணம் ஏற்படுத்தி மூலதனம் சேர்ப்பதற்கும் அரிய சீர்திருத்தங்கள் செய்வதற்கும் முயலுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். ஆகவே மேற்குறித்த குறையை நிவர்த்தி செய்யும்படியாய் நமது தலைச் சங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களையும் தலைவர், காரியதரிசி, பத்திராதிபர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

வேணும் சுபம்!

# கிளர்ச்சி.

## வட ஆற்காடு ஜில்லா

### சுந்தரவிநாயகர் சங்கம் கலவை.

20-11-30 மாலை 6-மணிக்குச் செங்குந்தர் பொது மடத்தில் சங்கத்தலைவர் அனுமதியின் பேரில் திருவாளர் பு. பெ. பொன்னுசாமி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ்க் கூடிய பொதுக் கூட்டத்தில் திரு. நா. வடிவேலு முதலியார் அவர்கள் தேவாரம் திருப்புகழ் இன்னிசை கருவியோடு பாடிய பின்னர் த. பரசுராம முதலியார் திரு. நா. வடிவேலு முதலியார், திரு. பாலசுந்தர முதலியார் ஆகியவர்கள் முறையே 'இளையான்குடிமாறநாயனார் சரித்திரம்' 'உருத்திராட்ச மகிமை' 'கந்தர் சஷ்டி விரதம்' என்பவைப்பற்றி பேருரை நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 9-30-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

18-1-31 மாலை 5 மணிக்குச் செங்குந்தர் வீதி சுந்தர விநாயகர் ஆலயத்தில் இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் உபதலைவர் திரு தி. க. நடேச முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் கடவுள் வணக்கம் பாடிய பின் திரு. நா. வடிவேலு முதலியார் து. பாலசுந்தர முதலியார் திரு த. பரசுராம முதலியார் ஆகிய மூவரால் முறையே 'சிவபுண்ணியப்பேறு' 'பஞ்சாக்ஷர மகிமை' 'ஒற்றுமையின் உயர்வு' என்பவைபற்றி நீண்ட சொற்பெருக்கு நிகழ்ந்த பின் இரவு 9-மணிக்குக் காரியதரிசி சபை வணக்கம் கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. இக்கூட்டத்திற்குச் சுமார் 250 ஜனங்களுக்குமேல் வந்தார்கள்.

25-2-31 மாலை 6மணிக்குச் செங்குந்தர் பொது மடத்தில் தலைவர்களின் கீழ் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் கடவுள் துதி பாடிய பிறகு, திரு த. பரசுராம முதலியார் து. பாலசுந்தர முதலியார் ஆகியவர்கள் முறையே 'கல்வி' என்பதைப்பற்றியும், 'இருந்தும் இறந்தவரைப்பற்றியும் அரிய பெரிய கருத்து பொருந்திய சொன்மாரி பொழிந்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறி உள்ளன.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. இச்சங்கத்தின் சார்பாக நடந்து வரும் ஆங்கில இரவு பாடசாலைக்கு உதவியாகவும் இச்சங்கத்திற்காகவும் நெ. 14 லைட் ஒன்று வாங்கவேணுமாய்த் தீர்மானிக்கிறது.

2. இச்சங்கத்திற்கு இதுகாறும் செலுத்திவந்த 2-அணா தொகையை இன்று முதல் மாதம் 1-க்கு அணா 0-0-6 வீதம் செலுத்தவேணுமாய்த் தீர்மானிக்கிறது.

3. இச்சங்கத்திற்குத் திரு. N. வடிவேலு முதலியார் அவர்களையும் திரு. K. வீரப்ப முதலியார் அவர்களையும் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கிறது.

17-3-31 மாலை 6-மணிக்குச் செங்குந்தர் பொது மடத்தில் சங்கத்தலைவர்களின் கீழ்க்கூடிய பொதுக்கூட்டத்தில் இன்னிசைக் கருவியுடன் கடவுள் வணக்கம் இனிமையாய் ஓதிய பிறகு திரு. த. பரசுராம முதலியார் திரு. நா. வடிவேலு முதலியார் முறையே கருணையைப் பற்றியும், கைத்தொழிலைப்பற்றியும், இறந்தும் இருந்தவரைப் பற்றியும் கேட்போர் உள்ளம் கரை திரண்ட வெள்ளம்போல் களிக்குமாறு இன்சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். பின் தலைவர் முடிவுரையில் நம்மூரில் கூட்டுறவுச் சங்கம் இருத்தல் மிகவும் அவசியத்தினும் அவசியம் என்று கேட்போர் மனத்தில் பதியுமாறு மிகவும் விளக்கமாகக் கூறினார். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறி இரவு 9-35 மணிக்குக் காரியதரிசியால் வந்தன உபசாரம் கூறப்பட்டு இனிதே முடிவு பெற்றது.

### தீர்மானம்.

நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்கு வருடக் கட்டணமாகிய ரூபா 5-0-0 கண்டிப்பாய் இம்மாதம் அனுப்பிவிட வேணுமாய்த் தீர்மானிக்கப்பட்டது.

அ. சு. சின்னசாமி முதலியார், தலைவர்.

### கலவை சுந்தர விநாயக செங்குந்தர் சங்கம்

பிரசோற்பத்தி ஆண்டு சித்திரைத் திங்கள் 4-ம் நாள் ஆகிய இன்று மாலை 4-மணிக்கு மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் செங்குந்தர் பொது மடத்தில் திருவாளர். தமிழ் வித்வான் வீரப்ப முதலியார் அவர்களின் தலைமையிற் கூடியது. அவ்வமயம் அமிழ்தினும் இனிய தேவார பாக்கள் இன்னிசைக் கருவியோடு இனிது பாடியபின் திரு. N. வடிவேலு முதலியார் அவர்கள் நங்குல மணியாகிய குமரக் கடவுளின் திருவிளையாடலைப் பற்றியும் நம்மவரது முதல் மகா நாட்டின் பெருமையைப்பற்றியும் திரு. D. பரசுராம முதலியார் மாணிக்க வல்லியின் சரித்திரத்தைப் பற்றியும் N. D. பாலசுந்தர முதலியார் இருந்தும் இறந்தவரைப் பற்றியும் மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் உவமான உவமேயங்களுடன் சொற்பொழிவு நிகழ்த்தியபின் தலைவர் முடிவுரைக்குப் பிறகு தலைவருக்கும் சபையோர்களுக்கும் நன்றி கூற, இரவு 7-45-க்குக் கூட்டம் முடிவு பெற்றது.

எ. முனிசாமி
எஸ். அருணகிரி
காரியதரிசிகள்.



## தஞ்சாவூர் ஜில்லா

### ஸ்ரீ ஷண்முகானந்த சன்மார்க்க சங்கம் திருமருகல்.

பிரமோதூத வருஷம் பங்குனி 4௳ செவ்வாய்க்கிழமை மாலை 7-க்குச் சங்கக் கட்டடத்தில் தலைவர் சு. ரு. இலட்சுமண முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. காரியதரிசி க. சுப்பிரமணியன் எழுந்து பின் வருமாறு கூறினார்.

இன்றைக்கு ஏழாண்டுகட்கு முன்னர் இச்சங்கத்தை நிறுவி அரும்பாடுபட் டுழைத்தவரும் 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்பதைச் சமூகத் தொண்டாற்றும் செயலில் காட்டியவரும் தென்னிந்திய மகாஜன சங்கத்தின் மலாய் நாட்டுப் பிரதிநிதியுமான உயர்சைவத் திருவாளர் இ. தி. தாண்டவராய முதலியார் காஜானில் (Kajang F. M. S.) விண்ணுல கடைந்தார் என்ற செய்தி எங்களை மிகுந்த துக்கசாகரத்தில் ஆழ்த்தி விட்டது. அன்னாருடைய தமையனார் திரு-இ. தி. சோமசுந்தர முதலியார் அவர்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேல்கண்ட விஷயத்தை யொட்டி தலைச்சங்கப் பிரசாரகர் சு. திருநாவுக்கரசு முதலியார் 'ஆக்கை நிலையாமை' 'புகழுடம்பு' 'கல்வி' 'சங்கத்தின் அவசியம்' இவைகளைப்பற்றி அரை மணி நேரம் அழகுறப்பேசி ஒவ்வொருவரும் திரு. தாண்டவராய முதலியார் அவர்களின் அரிய செயல்களைப் பேணி நடக்கவேண்டு மென்றும் வற்புறுத்தித் தென்னிந்திய மகாஜன சங்கத்தின் சார்பாக அவரது குடும்பத்தாருக்கு அநுதாபம் தெரிவித்துக் கொண்டார்.

பின் எல்லோரும் எழுந்து நின்று அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தார்கள்.

வயி. சா. இரத்தினசபாபதி முதலியார்,
காரியதரிசி.

---

## கோவை ஜில்லா

### செங்குந்த வாலிப மகாஜன சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழா.

இச்சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழா 15-3-31 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குக் கோவையை யடுத்த கணபதி என்னும் கிராமத்தில் ஆரம்பமாயிற்று. அழைப்புக்கிணங்கிக் கோவை, சேலம், மலபார் முதலிய ஜில்லாக்களிலிருந்து அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஆண்டு விழாத் தலைவர் புதுச்சேரி அரசாங்க மந்திரி உயர்திரு ஆ. வே. முத்தைய முதலியார் B.A. B.L. அவர்களும் மற்றுமுள்ள குலப்பிரமுகர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். விழாவுக்காக அமைக்கப்பட்ட மிக அலங்காரமான பந்தலில் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். கூட்டத்தைக் கோவை ஜில்லா நீதிபதி அவர்கள் (District Judge) திறந்து வைத்தனர். அப்போது அவர் ஓர் அரிய சொற்பொழிவு ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். அதைச் சென்னை வழக்கறிஞர் உயர்திரு V. இரத்தின முதலியாரவர்கள் B. A. B. L. தமிழில் மொழி பெயர்த்தனர்.

அதன் பின்னர் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று ஜில்லா சங்கத்தலைவர் உயர்திரு V. S. செங்கோட்டையா அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர் தமது முன்னுரையில் பல அருமையான விஷயங்களைத் தெளிவாகப் பேசினார். அப்போது வாலிபர் நிலையும், கடமையும் அவர்கள் ஊழியத்தின் அவசியமும் ஆடம்பரத்தின் பிரயோஜன மின்மையும் பற்றி வெகு உருக்கமாகக் கூறினார். பின்பு சங்கத்தின் வருட அறிக்கைத்தாள் சங்கக் காரியதரிசியால் படிக்கப்பட்டது. பின்னர் சென்னை அட்வகேட் உயர் திருவாளர் V. இரத்தின முதலியார் B. A. B, L. அவர்கள் நாட்டின் நிலையும் நமது கடமையும்" என்னும் பொருள்பற்றி ஒரு நீண்ட சாரமான சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மணி 12-30 க்கு மத்தியான போஜனத்திற்கு யாவரும் செல்லுவதற்குக் கூட்டம் கலைந்தது. சுமார் 600 பேர்களுக்குச் சங்கத்தின் பொக்கிஷதாரரான உயர்திரு C. P. கப்பினி முதலியாரின் மேல் பார்வையில் கணபதியில் திரு. இரத்தினகிரி முதலியார் பங்களாவில் விருந்து நடந்தது. மற்றும் பலருக்குத் தலைவர் உயர்திரு V. S. செங்கோட்டையா முதலியார் பங்களா 'பக்தி' விலாசத்தில் விருந்து நடந்தது.

பிறகு 1-30-மணிக்கு மறுபடியும் கூட்டம் ஆரம்பித்தது. உயர்திருவாளர் ராவ்சாகிப் C. M. இராமச் சந்திரஞ் செட்டியார் அவர்கள் B.A. B.L. வழக்கறிஞர் கோவை "நெசவுத்தொழிலின் நிலை" என்பதனை வெகு அழகான ஆராய்ச்சியுடன் ஒரு மணி நேரம் விரிவுரை நிகழ்த்தினார். பின்னர் கோவை நகர பரிபாலன சங்கக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் உயர்திரு C. S. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களும் கோவை அரசாங்கக் கல்லூரி தலைமை ஆசிரியர் உயர்திரு S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A. L. T. முறையே "வினையின் ஆக்கம்" "மக்கள் இன்புற்று வாழ்வதெப்படி?" என்ற பரந்த விஷயங்களை ஆணித்தரமாக மனதில் பதியும் வண்ணம் எடுத்து உபந்நியசித்தார்கள். அதன் பின்னர் திருவாளர்கள் சிவகுருநாதம் பிள்ளை, கிருஷ்ணசாமிகவுண்டர், கொல்லங்கோடு முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் சமூக முன்னேற்றத்திற்கான பல அரிய விஷயங்களைக் குறித்துச் சொல்லுரை யாடினர்.

ஒவ்வொரு சொற்பொழிவிற்கும் இடை இடையே வீணை, ஹார்மோனிய இன்னிசைக் கருவிகளுடன் வடசித்தூர் நே. சி. சா. பழனியப்ப முதலியாரால் கீதம் பாடப்பட்டது. சாயங்காலம் 5-மணிக்கு யாவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. புகைப்படங்கள் எடுக்கப்பட்ட பின்னர் 6-மணிக்

கு கூட்டம் மறுபடியும் கூடியது. பலர் பல தீர்மானங்களைக் கொண்டுவந்தனர். அப்போது கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் மிகவும் முக்யமானவைகளாயிருந்தாலும், விவாதம் அதிகம் நேரக்கூடியதாகவும் எல்லாச் செங்குந்தர்களுக்கும் பொதுவானதாகவும் காலதாமத மதிகமாகக் கூடியவையாக இருந்தபடியால் அவற்றைக் காஞ்சியில் கூடவிருக்கும் நமது இரண்டாவது மகாநாட்டில் யோசனை செய்து தீர்மானிப்பது நல்லதென்று விடப்பட்டது. பின்னர் தலைவர் தமது முடிவுரையில் நமது மதக்கொள்கைகளையும் நம்முடைய பிற்போக்குக் காரணங்களையும், எங்ஙனம் நாம் முன்னேற்ற மடையக்கூடும் என்பதனைத் தெளிவாகத் தம் பண்ணினுமினிய மொழியில்' கூறினார். அப்போது "வாலிபர்கள் எதையும் பழையதென்று தள்ளிவிடக் கூடாதென்றும், புதியன வென்று எல்லாவற்றையும் (சாரமற்றவையையும்) எடுத்துக் கொள்ளக்கூடா தென்றும், எவற்றையும் விவாதித்து அதன் உண்மைக் குணகுணத்தை அறிந்து தான் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், வாலிபர்கள் முக்யமாகச் செய்யக்கூடிய தர்மங்கள் நடமாடும் கோயில்களான பாமர சகோதரர்களுக்கு அறிவுச்சுடர், கல்வி பயிலும் சந்தர்ப்பம், தங்களைச் சுத்தமாகச் சௌக்யமாக வைக்கும் முறைகளை விளக்கிக் கூறல் முதலிய உதவிகள் புரியவேண்டுமென்றும் பின்னர் கோவைச் சங்கம் பன்னெடு நாள் முன்னேற்ற வேலைகள் புரிந்து செவ்வனே நடந்துவர ஆசி கூறி ஆசனத்தமர்ந்தார்.

பின்பு உதவிக் காரியதரிசி திரு ஈ. வே. சிங்காரவேலு முதலியார் B. A. கூட்டம் இனிது நடைபெற உதவி செய்த யாவரையும் பல அலுவல்களையும் தூரத்தையும் கருதாது விஜயஞ் செய்த பிரமுகர்களையும், தலைவரையும் உபந்யாசகர்களையும் மற்றும் யாவரையும் வாழ்த்தி நன்றிகூறிப் பின்பு ஜில்லா சங்கத்தலைவர் உயர்திரு V. S. செங்கோட்டையா முதலியார் ஆண்டு முழுதும் பல அரிய காரியங்களைச் செய்யத் தம்முடைய அவகாசத்தையும், தேவையான பொருளையும், வாகனங்களையும் சங்கத்திற் குதவினது போல சங்கக் குழவி வளர்ந்து தானுகப் பலமடைந்து நடக்கும் திறமை பெறும் வரைச் செய்யுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டனர்.

கூட்டத்தின்போது செங்குந்த மரபினரின் முக்கிய தொழிலான நெசவுப் போரை ஊக்கிக்க ஒரு தொழிற் காட்சிச்சாலை வைக்கப்பட்டிருந்தது. அதற்குக் குலாபிமானிகள் சித்தோடு, பவானி, சென்னிமலை, கோவை முதலிய இடங்களிலிருந்து தங்கள் ஜமக்காளம், கத்தர் சுதேசி, சேலைகள், வேஷ்டிகள், துண்டுகள், பெட்ஷீட் முதலியவற்றை அனுப்பிவைத்தார்கள். அதே சமயத்தில் கோவை ஜில்லா அரசாங்கச் சுகாதாரம், மதுவிலக்குக் கண்காட்சிச் சாலையும் அங்கே ஜில்லா சுகாதார ஆபீசர் Dr. ஜார்ஜ் என்பவரால் கொண்டு வரப்பட்டது. பால்மெஷின் முதலியவைகளும் கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

மா. ரா. இரத்தினகிரி முதலியார், காரியதரிசி,

## செங்குந்த வாலிபர் கழகத் திறப்பு விழா

24 4-31, தீ வெள்ளிக்கிழமை கோயமுத்தூர் ஜில்லா செங்குந்த வாலிபர்மஹாஜன சங்கம் சென்ற ஓராண்டாகக் கிராமங்களில் சீர்திருத்த வேலை செய்து கொண்டு வந்தது. மேற்படி சங்கத்திற்குக் கோயமுத்தூரில் ஓர் இருப்பிடம் இல்லாதிருந்த ஒரு குறையை நீக்குவதற்கும், உயர்தாக் கல்வியை நாடிவரும் மாணவர்கள் வகுப்பதற்கும், அயலூர்களிலிருந்து வியாபாரம், விவகாரம்,சங்கம் முதலிய அலுவலாக வரும் செங்குந்தர்கள் தங்கிச் செல்வதற்கும், கோயமுத்தூரில் வசிக்கும் செங்குந்தர்கள் வாரந்தோறும் கூடுவதற்கும், வாசகசாலை நிறுவுவதற்கும், இரவு பாடசாலை நடத்துவதற்கும் மிகவும் அவசியமெனக் கருதிக் கோவை ரங்கே கவுண்டன் வீதி 17/217 நெம்பர் வீட்டின் (சீதா விலாச பேங்கின்) மேல் மெத்தைகளைக் குடிக்கூலிக்குப் பேசி அதில் கோயமுத்தூர் ஜில்லா செங்குந்த வாலிபர் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. அக் கழகத்தின் திறப்பு விழாவைக்கோவை நகர பரிபாலன சபைத் தலைவரும், ஜில்லா போர்டு தலைவரும் M. L. C. யுமான உயர் திருவாளர் திவான் பகதூர் C. S. இரத்தின சபாபதி முதலியாரவர்கள் செய்து வைத்தார். அப்போது அவர் ஓர் அறிய சொற்பொழிவு நடத்தினார். "ஒவ்வொரு கலாசாலைக்கும் ஒவ்வொரு விடுதி (Hostel) அவசியம் என்றும், ஆனால் சில அசந்தர்ப்பங்களாலும் பணவசதி யின்மையினாலும் கோவை நகரத்தில் அங்ஙனம் விடுதிகள் அமைக்க முடியவில்லை. ஆனால் செங்குந்தர்களைப் போலவே இதர சமூகத்தவர்களும் தத்தம் மாணவர்களுக்கும் தீய வழிகளில் பிரவேசியா வண்ணம் பாதுகாப்புள்ள ஒரு விடுதி அமைப்பார்களானால் ஒவ்வொரு சமூகமும் விருத்தியடைவதல்லாமல் தேசமே செல்வாக்குப் பெறும் என்றும் கூறிச் செங்குந்த மாணவர் கழகம் நன்கு நடைபெற வேண்டும் என்று வாழ்த்தினார்.

வந்தனோபசாரத்திற்குப் பிறகு கூட்டம் பிற்பகல் தள்ளி வைக்கப்பட்டது.

பின்னர் மாலை 3-மணிக்கு உயர் திருவாளர் V.S. செங்கோட்டையா முதலியார் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது.

பொள்ளாச்சி தாலூகா வடசித்தூர் செங்குந்தர் சங்கக் காரியதரிசியான நே. சீ. சா. பழனியப்ப முதலியார் தமது இனிய குரலில் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

தலைவர் முகவுரை கூறி முடித்தவுடன் புது வருஷத்திய காரிய நிர்வாக சபை தேர்தல் நடந்தது.

### காரிய நிர்வாக சபை அங்கத்தினர்கள்

தலைவர்:-உயர்திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியாரவர்கள்.



உபதலைவர்கள் :—

1. உயர்திரு, அ. சாமிநாத முதலியார் காரமடை
2. ,, க. பெருமாள் முதலியார் கோவை
3. ,, K. முத்துக்குமாரசாமி முதலியார் கொல்லங்கேடு.

பொக்கிஷதார் :—

1. உயர்திரு C. P. சுப்பிணி முதலியார் கோவை
2. ,, M. இராமசாமி முதலியார் ,,

காரியதரிசி :—

உயர்திரு, வா. ப. நஞ்சய்யமுதலியார், கணபதி.

துணைக் காரியதரிசிகள் :—

உயர்திரு ஈ. வே. சிங்காரவேலு முதலியார் B.A., ஈரோடு.

,, P. சுப்பையா முதலியார், கோவை.

மற்ற அங்கத்தினர்கள் :—

உயர் திரு. V. V. வெள்ளியங்கிரி முதலியார், கோவை.
,, S. சுப்பையா முதலியார், ,,
,, V. S. A. ஆறுமுக முதலியார், ,,
உயர்திரு. K. குமாரசாமி முதலியார், கோவை.
,, செ. சுப்பைய முதலியார் ,,
,, நல்லப்ப முதலியார் ,,
,, நஞ்சப்ப முதலியார் ,,
,, மா. ரா. இரத்தினகிரி முதலியார் கணபதி.
,, சி. ரா. சுப்பைய முதலியார் ,,

மற்றும் கோயமுத்தூர் ஜில்லாவில் நம்மவர்வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வருடம் வைகாசிஸ்ரீ காஞ்சிபுரத்தில் கூடவிருக்கும் இரண்டாவது மகாநாட்டிற்கு அனுப்புவதற்காகக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

(1) நமது குறைகளுக்குக் காரணமான அறிவு விருத்தியின்மையையும், கல்வியின்மையையும் நீக்கி, அறிவு, கல்வி, இவ்விரண்டையும், நம் குலத்தார் பெறுமாறு செய்யவேண்டும் நமது குலத்துச் சிறுவர், சிறுமிகள், யாவருக்கும் ஆரம்பக்கல்வி அவசியம் கொடுக்கவேண்டும்.

(2) தாலி, சீர், சடங்குகளில் வித்தியாசமிருப்பதால் ஒற்றுமைக் குறைவும், விரோதமும் பேதமும், ஏற்படுகின்றது. அதைத் தவிர்க்க எல்லா ஊர்களிலும் நம் செங்குந்தர் ஒரேவிதமான சீர் சடங்குகளை நடத்த ஏற்பாடு சங்க மூலம் செய்ய வேண்டும். ஆடம்பரச் செலவைத் தவிர்த்துச் சிக்கனமாகச் செய்யவேண்டும்.

(3) பல வகுப்புக்களாகப் பிளவுபட்டிருக்கும் நமது ஜாதியினர் யாவரும் ஒற்றுமையாவதற்கு முக்கிய வழியான ஒற்றுமைக் கல்யாண சம்பந்தங்களைச் சீக்கிரத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும். ஒற்றுமைத் திருமணங்களுக்கு விரோதமாகச் சில இடங்களில் ஜாதிக்கட்டுப் போன்ற கஷ்டங்களை அறிவீனத்தால் செய்து நம் முன்னேற்றத்தைத் தடுக்கும் செய்கைகளைக் கண்டித்து ஒற்றுமையை வளர்க்கவேண்டும்.

(4) நம்மவர் யாவரும் அன்னிய நாட்டுத்துணி பகிஷ்கரித்து நம் நெசவுத்துணிகளை உடுத்துவதல்லாமல், நமது தொழிலபிவிருத்திக்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும். பொதுவில் கிராமந்தோறும் கூட்டுறவுச் சாதனங்கள் செய்ய முயற்சிக்க வேண்டும்.

(5) மது பானத்தால் கெடுதியே யன்றி நன்மை ஏற்படாது என்பது தெளிவான விஷயம். அதனால் மதுவிலக்குக்காக ஜாதிக்கட்டுமானம் ஊர்க்கட்டுமானம் செய்து மதுபானத்தை அடியோடு ஒழிக்கவேண்டும். மற்றும் அஹிம்சையும், சத்தியமும், அடிப்படையாகக் கொண்டு ஒழுகவேண்டும்.

மேற்படி தீர்மானங்கள் நிறைவேறின பின்னர் சங்கத் தலைவர் உயர்திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியாரும் காரியதரிசி உயர்திரு, E. V. சிங்காரவேலு முதலியார் B. A. அவர்களும் புது வருஷத்திய திட்டத்தைக் கிராம வேலை, உள்ளூர் வேலை என்ற இரண்டு பாகுபாடுகளுடன் சவிஸ்தாரமாகக் கூறினார்கள்.

கிராமங்களில் கக்ஷிச் சண்டைகள் பிற ஜாதியினர் ஆதிக்கத்தால் துன்பப்படுதல், கல்வியின்மை, வீண் விவகாரங்கள், தொழிலபிவிருத்தியின்மை முதலியவற்றை நீக்கி, முன்னேற்றமடையச் செய்வதற்கு நம்மவர் வதியும் கிராமங்களில் மாதமொருமுறை கூட்டம் போடவேண்டும் உள்ளூரில் தொழிலாளிகள் அதிகமாயிருப்பதால் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு காலமானதாலும், ஞாயிறுதோறும், கோயமுத்தூர் ஜில்லா செங்குந்த வாலிபர் கழகத்தில் கூட்டம் கூடி அபிவிருத்திக்கான விஷயங்களை ஆலோசனை செய்யவேண்டுமென்றும் சங்கம் என்றும் கீர்த்தியுடன் நடந்து வருவதற்கு மூலதனத்திற்காகக் கிராமத்தார் ஒவ்வொருவரும் வருஷ மொன்றுக்கு எட்டணாவும், கல்யாணத்திற்கு ஒவ்வொரு ரூபாயும் உள்ளூர் வாசிகள் மாதம் மாதம் அவரவர்கள் நிலைமைக்குத் தகுந்தவாறு கட்டணமும் கொடுக்கவேண்டுமென்றும் நமது கழகத்தை நமது தலைச் சங்கத்தோடு இணைக்க 5 ரூபாய் அனுப்பவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

பின்னர் சந்தன தாம்பூலம் வழங்கப்பட, கூட்டம் இனிது கலைவுற்றது.

சுப்பைய்ய முதலியார், காரியதரிசி.

# செங்குந்தர் இரண்டாவது மகாநாடு

## வரவேற்புச் சபைக் கூட்டம், காஞ்சிபுரம்

### 4-வது கூட்டம்

நிகழும் பிரஜோற்பத்தி௵ சித்திரை௴ 15௳ (28-4-31) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்குக் காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் மண்டபத் தெரு, செங்குந்தர் இரண்டாவது மகா நாட்டு வரவேற்பு சப்கமிட்டிக் கூட்டம் ஐயம்பேட்டை திரு. வேலாயுத முதலியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட விஷயங்கள் முடிவு செய்யப்பெற்றன.

### மகாநாட்டுத் தலைவர்

மகா நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருந்த அம்பா சமுத்திரம் திரு. K. N. சுப்பிரமணிய முதலியாரவர்கள் குடும்ப நிலையினை உத்தேசித்து வர முடியாதெனத் தந்திமூலம் அறிவித்து விட்டனராதலின் அவருக்குப் பதிலாக திருவாரூர் முனிசிபல் கவுன்சிலரும் தாலூக்காபோர்டு அங்கத்தினருமாகிய திருவாளர் T.N. சபாபதி முதலியார் அவர்களையாவது அல்லது அருப்புக்கோட்டை யூனியன் சேர்மன் திரு. அ. து. சீ. சிவசுப்பிரமணிய முதலியாரவர்களையாவது அழைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

பொதுக் காரியதரிசியாக செங்கற்பட்டு டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும் குண்ணத்தூர் யூனியன் சேர்மெனும் பிரபல வியாபாரியுமாகிய திருவாளர் கனக தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

### டிக்கட்டுகளின் விபரம்

வரவேற்பு அங்கத்தினர் டிக்கட் ரூபா மூன்றும் பிரதிநிதி டிக்கட் ரூபா ஒன்றும், விசிட்டர்களின் டிக்கட் அணா நான்குமாக முடிவு செய்யப்பட்டது. பெண் பாலர் மட்டும் டிக்கட் இன்றி அனுமதிக்கப் படுவர்.

### தொண்டர் படை

மகா நாட்டின் தொண்டர் படையில் சேர விரும்புகின்றவர்கள் தங்கள் பெயரையும், விலாசத்தையும் தெளிவாக மே௴ 5௳க்குள் எழுதி அனுப்பிவிட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள் 13௳க்குள் காஞ்சிபுரத்தில் வந்து சேர்ந்துவிட வேண்டும்.

தொண்டர் படைத்தலைவர்களாக அசனம்மாபேட்டை திரு ஆரிமுத்து முதலியாரவர்களும், காஞ்சிபுரம் P. சுப்பிரமணிய முதலியாரவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

### தீர்மானங்கள் அனுப்பவேண்டிய தேதி

மகாநாட்டில் கொண்டுவர விரும்பும் தீர்மானங்களை மே௴ 10-ந்தேதிக்குள் "காரியதரிசி தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டு வரவேற்புக் கமிட்டி காஞ்சிபுரம்" என்ற விலாசத்திற்கு அனுப்பிவிட வேண்டும்.

### டிக்கட்டுகள் விற்குமிடம்

டிக்கட்டுகள் கீழ்க்குறித்துள்ள வரவேற்புக் கமிட்டி ஆபீஸிலும் ஆடிசன்பேட்டை ஜவுளி வியாபாரிகள் மா. ஈ. சோமசுந்தர முதலியார், வே மு. கந்தசாமி முதலியார், பி. செ. சம்பந்த முதலியார், நூல் வியாபாரம் கா. அ. பழனிச்சாமி முதலியார், பச்சையப்பன் ஐஸ்கூல் தமிழாசிரியர் திரு. வி. திருஞான சம்பந்த முதலியார் ஆகிய இவர்களிடமும் விற்பனைக்கு மேமாதம் முதல் தேதியிலிருந்து தயாராக இருக்கும். வேண்டியவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வரவேற்பு சப்கமிட்டியில் திருவாளர்கள் M. B. கந்தசாமி முதலியார் B. A. B. E., ம. சு. கந்தசாமி முதலியார் ஆகிய இருவரும் சேர்த்துக் கொள்ளப் பெற்றனர்.

158897



ஐயா,
மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்புருதி 10-நாட்களுக்குள் புண் ஆறிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.
ராசிப்பாளையம் கிராமம்
க. ஏ. அங்கப்ப தேவர், தூலூர் போஸ்டு.

12-9-29 செம்மனுப்பட்டி
ஐயா, ** மின்சார ரசத்தை எருமை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுரியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.
தொந்தி செட்டியார், வாடிபட்டி போஸ்டு.

மின்சார ரசம்
சகல ரோகங்களுக்கும் தேவாமிர்தம் போன்றதென ஜகப்பிரசித்திப் பெற்றது.
ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.
புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு
கேட்லாக் இனும்.
விலாசம்:— மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஆரணி 21-5-29
ஐயா,
** 6-வேளை மின்சார ரசம் மருந்தில் கால் விழுந்து கிடந்த நோய் தீர்ந்தது இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்
M. A. ஆளவந்தார் பாகவதர், பிந்சல் தெரு.

Champion Reefs, 27-1-30
ஐயா
என் மனைவிக்கு 7 வருஷ காலமாக என்னால் இயன்ற வரை ஏராளமான பணத்தைச் செலவு செய்து தீராமலிருந்த வியாதி தங்கள் மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.
R. V. Kattamari, G. Block, 53rd Line

மதன சுந்தரி மாத்திரைகள்
இம்மாத்திரையை உட்கொண்டவர்களுக்கு சிற்றின்பம் இன்னதெனப் பூர்த்தியாய் விளங்கும். இந்திரபோகத்தைத் தரும். ஆண்தன்மை குன்றியவர்களுக்கும் சந்ததி இல்லாதவர்களுக்கும் இதுசஞ்சீவிபொன்றது தேக வலிமை நரம்புகளுக்குச் சக்தியும் உண்டாக்குவதன்றி இருபாலார்க்கும் இன்பத்தையுண்டாக்கும். ஒரு தடவை இம்மாத்திரைகளை உண்டு அனுபவித்தவர்களுக்கு நாங்கள் மறுபடியும் சொல்ல வேண்டுவது இல்லை. இதுவே தேவாமிர்தம்.
இதன் விலை டப்பி 1-க்கு ரூ. 1—0—0
தபால் செலவு பிரத்தியேகம்
ரூபிஸ் பெஸிபிக் ஔஷதாலயம்,
நெ. 30, நம்மாழ்வார் தெரு, மதராஸ்.

நமது தலைவர்களின்
அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 4 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் ..... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
கீழ்ப்பாககம், சென்னை.

ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையுள்ளது.




எங்கும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தரக்கூடியது நமது

## (புட்டி 1-க்ரு கு. 1—4) தேவரசம் (புட்டி 1-க்கு ரூ. 1—4)

எல்லாவிதமான ஜுரங்கள் க்ஷயம், காசம், இருமல், மூச்சுத் திணருதல், ஜலதோஷம், தலைவலி, மண்டை இடி, ஒத்தத் தலைவலி, கை கால் குடைச்சல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, வாய்வு சம்பந்த வியாதிகள், வாத ரோகம், பிளேக்கு, காலரா, அஜீரணம், வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, பல்வலி வாய்நாற்றம்,- வாய்புண், வாந்தி, அசதி, ஜன்னி, சூதக ஜன்னி முதலிய திடீர் என்று எர்படும் எல்லாவித வியாதிகளுக்கும் உடனே உபயோகப்படுத்தலாம். ஒரு தரம் பரீக்ஷை பாருங்கள். உங்கள் ஊரில் வியாபாரிகளிடம் கேழ்க்கவும். கிடைக்காவிட்டால், உடனே எங்களுக்கு எழுதிப் பெற்றுச் கொள்ளவும். விலை புட்டி, ரூ. 1—4—0 V. P. வேறு




## தேவாமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லா வியாதிகளையும் போக்கும். அன்றாடம் மலப்பிரவர்த்தியை கிரமமாகச் செய்யும். குன்மம் மூலாதார உஷ்ணம், மூலமுளை, மூலத்தில் ரத்தம் வருதல், மலச்சிக்கல் முதலிய வியாதிகளைப் போக்கும். விவரம் கேட்லாக் பார்க்கவும். 1 சேர் டின் ரூ. 2—0—0.

## மதனசிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியையும், நீடித்த போக சக்தியையையும், இழந்த ஆண்மையும் பறமானந்த சந்தோஷத்தையும் கொடுக்கும்.
ஒரு சேர் டின் 1-க்கு ரூ. 3—0—0 V. P. வேறு.




## டாக்டர் எஸ். பி. வைத்தியசாலை

தபால் பெட்டி நெ. 169, 149, பிராட்வே, மதராஸ்.

குறிப்பு:—நமது செங்குந்த மரபினரான, டாக்டர் S. பழனியப்ப முதலியாரால் தயார் செய்யப் படும் மருந்துகள் மிகவும் மேலான குணத்தைக் கொடுப்பதால் எல்லோரையும் உபயோகிக்குமாறு சிபார்சு செய்கிறேன். ஆசிரியர் ம. ஷண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., மதராஸ்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |